குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 44] குரோதன ஆண்டு ஆனித்திங்கள் 10-7-85 [இதழ்

தருமையாதீன முதற்குரவர் குருபூஜை விழா

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழிபாட்டில்



வழிபாடாற்றிய

திருப்பனந்தாள்

ஸ்ரீ காசி மடம்

கயிலைமாமுனிவர்

ஸ்ரீமத். காசி வாசி

முத்துக்குமாரசாமித்

தம்பிரான் சுவாமிகளுக்கு

பொன்னுடைப் போர்த்தி

ஆசியருளல்

8—6—85

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ
குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 44 ‖ 10-7-85 ‖ இதழ் 8

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

அப்பார் கமலையுள் ஞானப்ர
காசநீ ஆண்டதனை
இப்பார் அகிலாண்டம் எல்லாம்
அறிந்தன யான்அறியேன்
தப்பா துரைத்தனன் முப்பாசம்
என்னைத் தடுத்ததென்றால்
செப்பார் உனைச்சிவம் என்று
உலகில் சிரிப்பரன்றே.

—ஞானப்பிரகாசமாலை 10

ஆசிரியர் :-

வித்துவான்

இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்

சி.அருணைவடிவேல்முதலியார்

உட்பொருள்

எண்		பக்கம்
1	காவிரிவளம் - அன்றும் இன்றும் ...	621
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ...	626
3	திருவாமாத்தூர் தலச் சிறப்புக்கள் ..	630
4	கள்ளமாய் வாழ்கின்றாய் கல்நெஞ்சே ! ...	636
5	அபிராமி அந்தாதி ..	637
6	நால்வர் காலம் ...	642
7	திருவருட்பாத் திரட்டு	645
8	காரைக்காலம்மையார் - ஓர் சமய புரட்சிவாதி ...	651
9	கதிரவன் குடும்பம் ...	655
10	திருஞானசம்பந்தர் - குருவருட் சிந்தனை ...	658
11	செய்திகள் ...	663
12	எதிர்காலம் ..	666
13	நெல்லி ...	669
14	இதழ்வழிச் சைவசமயப் பயிற்சி - பாடம் - 6 ...	671

ஆண்டுச் சந்தா உள்நாடு	ரூ. 12	ஆயுள் சந்தா உள்நாடு	ரூ. 125
ஆண்டுச் சந்தா சிலோன்	25	ஆயுள் சந்தா வெளிநாடு	350
ஆண்டுச் சந்தா வெளிநாடு	35		

உ
குருபாதம்
ஞானசம்பந்தம்
தருமை ஆதீனத் திங்களிதழ்

மலர் 44 | குரோதன - ஆனி - 10-7-85 | இதழ் 8

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

காவிரி வளம் - அன்றும் இன்றும்

வாழவைத்த காவிரி :

தமிழகத்தின் ஜீவநதி காவிரி. தமிழக மக்களின் இலக்கியமும், வாழ்வும், வரலாறும் காவிரியோடு பின்னிப் பிணைந்து நிற்பன. குடகுமலையில் பிறந்து கொங்குநாட்டில் புகுந்து சோழநாட்டில் தவழ்ந்து அந்நாட்டை வளங்கொழிக்கச்செய்த காவிரி, தமிழர் நாகரிகத்தின் பிறப்பிடமாகத் திகழும் தஞ்சைத் தரணியைத் தன் நூற்றுக்கணக்கான கிளை ஆறுகளாகிய கரங்களால் வளமூட்டி வாழவைத்தது. அக்காவிரி இன்று வரண்டுபோகும் அவலநிலைக்கு வந்திருக்கிறது. தஞ்சைத் தரணியின் எதிர்காலத்தையே கேள்விக் குறியாக்கத்தக்க இந்தச் சூழ்நிலையைக் கவனத்தோடு ஆராய்ந்து, தக்க தீர்வுகாண மக்களையும் அரசினையும் விழிப்படையச்செய்விக்கும் பொறுப்பும் கடமையும் காவிரிவளத்தால்வாழும் ஒவ்வொருவருக்கும் உண்டு.

காவிரி வளம் :

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் இலக்கியங்களிலேயே காவிரி வளம் சிறப்பாக எடுத்துரைக்கப்பட் டுள்ளது. வான்பொய்ப்பினும் தான்பொய்யாக் காவிரிவளத்தைப் பட்டினப்பாலை ஆசிரியர் கடியலூர் உருத்திரங்கண்ணனார்,

" வசையிற் புகழ் வயங்கு விண்மீன்
திசை திரிந்து தெற்கேகினும்
ஏற்பாடிய தனியுணர்வின்
புள்தேம்பப் புயன்மாறி
வான்பொய்ப்பினும் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி "

எனப் புகழ்ந்து போற்றுகின்றார். வெள்ளைக்குடி நாகனார் என்ற புறநானூற்றுப் புலவரும்,

" இலங்கு கதிர்வெள்ளி தென்புலம் படரினும்
அந்தண் காவிரி வந்துகவர் பூட்ட "

எனக் காவிரியின் வற்றாத வளத்தை வியந்து பாடுகின்றார். இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில்,

" கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
கால்பொரு நிலைப்பின் கடுங்குரல் ஏற்றெடும்
சூல்முதிர் கொண்மூப் பெயல்வளம் சுரப்பக்
குடமலை பிறந்த கொழும்பல் தாரமொடு
கடல்வளன் எதிரக் கயவாய் நெரிக்கும்
காவிரி! .... "

என அழகுபடக் காவிரி வளத்திற்குச் சிறப்புச் சேர்க்கிறார். காவிரி யின் வற்றாத வளத்தைச் சங்க இலக்கியங்கள் மட்டுமல்லாது சமய இலக்கியங்களும் பலபடப் போற்றியுள்ளன.

சோழர் பணிகள் :

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சோழன் கரிகால் பெருவளத்தான் காவிரி வளத்தைப் பயன்கொள்ள வேண்டி இந்

நதிக்கு மாபெரும் கரையமைத்தான் என்பதை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. மேலும், இம்மாமன்னனே வியப்பூட்டும் பொறியியல் திறத்தோடு காவிரியின் குறுக்கே கல்லணை ஒன்றைக் கட்டித் தஞ்சைமாவட்டத்தின் பாசன வாய்ப்பினை மேலும் முறைப் படுத்தினன். பிற்காலச் சோழர்கள் தென்னார்க்காடுமாவட்டத்தில் காட்டுமன்னார்குடியை அடுத்துவீர நாராயணப்பெருமாள்ஏரிஒன்றை வெட்டுவித்துக் காவிரியை அதனொடு இணைத்து அப்பகுதிக்கு வள மூட்டி வாழ்வித்தனர். வீரசோழன் என்ற சிறப்புப்பெயர் பெற்ற மன்னன் ஒருவன் மேலும் சோழநாட்டின் பாசனவசதிக்காக வீர சோழன் ஆறு ஒன்றை வெட்டுவித்தான். தற்போது தஞ்சையில் ஓடும் புத்தாறு, முதல் இராசராசன் காலத்தில் வெட்டப்பெற்றுப் பட்டுக்கோட்டைப்பகுதிப் பாசனத்திற்குப் பயன்கொள்ளப்பட்ட தாக அறிஞர்கள் குறித்துள்ளனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகத் தஞ்சை மாவட்டத்தில் இருபோக சாகுபடிக்கு உத்திர வாதமாக நின்ற காவிரிவளம் இன்று அரசியல் காரணங்களால் முடக்கப்பட்டுவிட்டது. தஞ்சை தரிசாகிவிடும் நிலைக்கு ஏறத்தாழ வந்தாகிவிட்டது. ‘மானம் பார்த்த சீமை’ யாக இம்மாவட்டம் மாறிவரும் அவலத்திற்குக் காரணங்கள் என்ன?

காவிரி வரண்டதேன்?

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் காவிரி நீரை உரியவாறு பயன் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் சேலம் மாவட்டம் மேட்டூரில் காவிரியின்குறுக்கே ஒருபெரிய அணை அமைக்கப்பட்டது. இவ்வணை கட்டப்பட்ட காலம் தொடங்கி முறையான பாசனவசதி தஞ்சை திருச்சி மாவட்டங்களுக்குக் கிடைத்து வந்தது. மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்டவுடன் கர்நாடகத்தினர் காவிரிநீரைத் தங்கள் மாநிலப் பாசன வசதிக்குப் பயன்கொள்ளவேண்டித் தமிழ் நாட்டுடன் 50 ஆண்டுக்கால ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்ட னர். இதன் அடிப்படையில் கர்நாடகமாநிலம் மைசூருக்கு அருகில் காவிரியின் குறுக்கே கிருஷ்ணராஜசாகர் என்ற பெரிய அணைஒன்று கட்டப்பட்டது. இது மேட்டூர் அணையின் கொள் அளவில் ஏறத் தாழ முக்கால் பங்கு கொள் அளவு உடையது. காவிரி நீர்ப்பரப்புப் பகுதியில் பெய்யும் மழையின் பெரும்பகுதி கிருஷ்ணராஜசாகருக்கே

சென்று சேர்கின்றது. இதனால் மேட்டூருக்கு நீர் வரத்து பாதியாகக் குறைந்தது. இதற்கும்மேலாகக் கர்நாடகஅரசு காவிரியின் உபநதிகளுள் ஒன்றாகிய 'கபினி' யின் குறுக்கே ஒப்பந்தங்களுக்கு முரணாகத் தன்னிச்சையாக அணை ஒன்றைக்கட்டியது. இதுமேலும் மேட்டூர் அணையின் நீர் வரவைக் குறைத்தது. கர்நாடக - தமிழ் நாடு காவிரிநீர் ஒப்பந்தம் 1974 இல் முடிவுக்குவந்தபிறகு முனைப்போடு தமிழக உரிமைகளுக்காக நாம் போராடத்தவறினோம். பல மாநிலங்களைக் கடந்து ஓடும் ஆற்றுநீர்ப் பங்கீட்டுப் பொறுப்பு மத்திய அரசிடம் இல்லாது மாநில அரசிடமே இருப்பதால், மத்திய அரசின் உதவியையும் தமிழகத்தால் பெற இயலவில்லை. அவ்வப்போது கர்நாடகத்தைக் கெஞ்சி நீர் பெற வேண்டிய அவலம் விளைந்த வரலாறு இது.

மாற்று ஏற்பாடுகள் பயன்தருமா ?

பல்வேறு காரணங்களால் பருவமழை பொய்த்துவிட்டது. வான மண்டலத் தூய்மை கெட்டதாலும், காடுகள் அழிக்கப்பெற்றமையாலும், மக்களின் நெறிமுறை கெட்டமையாலும், வேறு சில காரணங்களாலும் மழைவளம் குறைந்துவருவதாக அறிஞர்கள் குறிக்கின்றனர். கிருஷ்ணராஜசாகரும், கபினியும் நிறைந்து, வழியும் எஞ்சிய நீர் மேட்டூருக்குவந்து, மேட்டூர் அணை நிறைந்து, தஞ்சைக்கு நீர்வருவது என்றநிலை பெரிதும் அவலத்திற்குரியது. தஞ்சை மாவட்டத்தில் நிலத்தடிநீரைப் பயன்கொள்ளலாம் எனக் கருதினால் அதிலும் பல சிக்கல்கள் உள்ளன. சில வட்டங்களில் நிலத்தடிநீர் மிக ஆழத்தில் உள்ளது. சில இடங்களில் நீர் சாகுபடிக்கு உகந்ததாக இல்லை. மேலும் நிலத்தடிநீரை மிகுதியாக மேற்கொணர்வதால் மரங்கள் - குறிப்பாகத் தென்னை-பட்டுப்போய் விடுகின்றன. பெரியகட்டிடங்களுக்குச் சேதம்விளைகின்றது. மேலும் பம்புசெட்டுகள் வாங்கும் செலவு, மின்சாரத்தட்டுப்பாடு, இவற்றால் ஏற்படும் செலவுகளின் மிகுதி போல்வன நிலத்தடி நீர்ப்பாசனத்திற்கு உகந்ததாக இல்லை. ஆற்றுப்பாசனத்தால் ஏற்படும் வண்டல் வளம் குறைந்துபோய்விட்டது. புதிய உரங்கள் பயிர்களுக்கு வளம் தருகின்றன. மண்வளம் பல நூறு ஆண்டுகளாகப் பயிர்செய்தமையின் குன்றிப்போய்விட்டிருக்கிறது.

உழவர் துயர் :

'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்ற பாராட்டுரைகள் இன்று தஞ்சை விவசாயிகளுக்கு உவப்பூட்டுவனவாக இல்லை. காலம் கடந்துவரும் ஆற்றுநீர் - முறைவைத்துத் தண்ணீர்விடுதல் - கடைமடைகளுக்கு நீர் சென்று சேராதநிலை - இயற்கையால் ஏற்படும் வரட்சி மற்றும் வெள்ளம் - பூச்சிகளால் ஏற்படும் பேரழிவு - உற்பத்திசெய்த தானியங்களுக்கு உரியவிலை கிடைக்கப் பெறாத நிலை - மாவட்டத்தில் நிலவும் கூலித் தகராறுகள் - அரசின் சில சட்டதிட்டங்கள் போல்வன தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்குப் பெரிதும் சோர்வினை விளைத்து வருகின்றன. தீவிர விவசாயிகள் பலர் நிலங்களை வந்தவிலைக்கு விற்றுவிட்டு நகரங்களில் குடியேற விழையும் அளவுக்கு நிலைமை சீர்கெட்டுப் போய்விட்டது.

தமிழக அரசிற்கு வேண்டுகோள் :

தமிழக அரசு காவிரி நீர்ப் பிரச்சனைக்கு உடனடியாக ஒரு சிறந்ததீர்வினை எட்ட ஆவன செய்யவேண்டும் என ஞானசம்பந்தம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கின்றது. தஞ்சை மாவட்ட நீர்ப்பாசனத்திற்கு உரிய உத்திரவாதத்தை விரைந்து தமிழக அரசு வழங்கத் தவறினால் தமிழ் நாட்டில் உணவுப்பஞ்சம் ஏற்படுவது தவிர்க்க இயலாததாகிவிடும். மத்திய அரசுடனும், கர்நாடக அரசுடனும் இணக்கமான சூழ்நிலை நிலவும் இந்நேரத்தில் விரைவான பேச்சு வார்த்தைகளின் மூலம், தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு மகிழ்ச்சி ஏற்படும் ஒரு நல்ல ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளும் வாய்ப்பினைத் தமிழக அரசு தவறவிடக்கூடாது. காவிரி நமது ஜீவநதி! இது இன்னும் வற்றிவிடவில்லை. அதன் தடைகளை அகற்றுவோம்! வளம் பெறுவோம்! வாழ்வோம்! வாழ்விப்போம்!

வாழிய காவிரி வாழ்க நற்றமிழர்

வாழிய தமிழர்தம் வளமிகு நாடு.

உ

குருபாதம்

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

குன்றக்குடியில் நடைபெற்ற

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் 45ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின்

மணிவிழாவில் வழங்கியருளிய

ஆசியுரை

8 7—1985

"மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தம் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தகத்தான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தி யானவன்என் கண்ணு ளானே"

அனைத்தும் சமயத்தில் அடங்கும் :

தருமையாதீன ஞானப் பண்ணையில் உருவான தவத்திரு. அடிகளார்அவர்களின் மணிவிழா பல்லாயிரம்மக்களிடையே இங்குச் சிறப்பாக நடந்துகொண்டிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. நேற்று அமைச்சர்கள்பலரும் கலந்துகொண்டார்கள். இன்று அருளாளர்கள் பலரும் கலந்துகொண்டுள்ளனர். இன்றும் தொழிலமைச்சரும், எதிர்க்கட்சித் தலைவரும் கலந்துகொண்டுள்ளனர். அமைச்சர்களை யும் அவர்கள் சார்ந்துள்ள அரசியலையும் எளிதில் புரிந்துகொள்ள லாம். ஆனல் அருளாளர்களையும் அவர்கள் இணைந்துள்ள சமயத் தையும் அத்துணை எளிதாக விளங்கிக்கொள்ள இயலாது. மனித

இயக்கத்தில் கைகளின் செயலையும் கால்களின் பணியையும் பார்த்துத் தெரிந்துகொள்வதுபோல, இருதயம், நுரையீரல், மூளை ஆகியவற்றின் இயக்கத்தை எளிதில் புரிந்துகொள்ள இயலுமா? புரிந்துகொள்ள முடியாவிட்டாலும் அவை இயங்கவில்லை என்று சொல்ல இயலுமா? அதுபோலவேதான் சமயத்தின் நிலையும். அருளாளர்களின் நிலையும், சமயவழிகளின் செயல்களும், பலன்களும் எளிதாக வெளியில் தெரிவதில்லை. அடங்கியே இருக்கும். கடவுளும் மறைந்திருந்துதானே அருளை வழங்குகின்றார். இத்தகைய நுட்பம் வாய்ந்த சமயத்தை அரசியல்வாதிகளும் சமுதாயவாதிகளும் ஒதுக்கலாம். ஆனால் சமயம் என்றுமே அரசியலையும் சமுதாயத்தையும் புறக்கணித்ததில்லை. மனிதர்களை மட்டுமல்லாது எல்லா ஜீவராசிகளையும் இணைத்துச்செல்வதே சமயவாழ்வு. அதனால்தான் யானையும் எறும்பும் பாம்பும் கூடப் பெருமானை வழிபட்டதாகச் சமய வரலாறு கூறுகிறது. திருவானைக்காவில் யானைவழிபட்டதையும் திருஎறும்பியூரில் எறும்புகள் வழிபட்டதையும், சில ஆண்டுகளுக்கு முன்பு காக்கிநாடாவில் பாம்பு வழிபட்டதையும் முறையே புராண வாயிலாகவும், நேரில் காண்பதன் வாயிலாகவும் அறிகிறோம். இறைவன் பெருங்கருணையுடன் வழிபடும் எல்லா உயிர்களுக்கும் எல்லா இடங்களிலும் இருந்தருளுகின்றார் என்று அருள்நூல்கள் கூறும். அப்பரடிகள் இவ்வாதீனத்தின் பூஜாமூர்த்தியாகிய காளத்திப் பெருமானைக் குறித்துப் பாடும்பொழுது அவ்விறைவன் எங்கெங்கெல்லாம் இருந்தருளுகின்றார் என்றுவிளக்கியருளுகின்றார்.

எங்கும் இருக்கும் இறைவன் :

மனத்துள்ளும், தலைமீதும், வாக்கிலும், தொண்டர் இனத்திலும், இமையவர்தம் முடியிலும், ஏழண்டத்து அப்பாலும், நறுங்கொன்றைப்போதினுள்ளும், மலையிலும், நெருப்பிலும், காற்றிலும், மேகத்திலும், கயிலாயத்துச்சியிலும், காளத்தியிலும், என்கண்ணிலும் நிறைந்தருளுகின்றான் என்று பாடியருளுகின்றார். என் கண்ணிலேயே நிற்கின்றான் என்று கூறும் உலகியல் வழக்கையும் இங்கே சிந்திக்கலாம்.

தருமை தந்த தவராசர் :

இங்ஙனம் எங்கும் நிறைந்தருளுகின்ற இறைவனின் பெருங்கருணைப் பெருவெள்ளத்தில் ஈடுபாடும் பிடிப்பும் கொண்டு உருவான தவத்திரு. அடிகளார் அவர்கள் சமுதாயத்தின் பக்கமும் சென்று பணி செய்து வருகிறார்கள். அவர்கள் 1945 ல் தருமையில் துறவற ஆசிரமம் ஏற்றார்கள். 40 ஆண்டுகள் ஆகின்றன. 5 ஆண்டுகள்

தருமையில் மொழி, சமயம், தத்துவம் பயின்றவர்கள். இளமைக் காலத்திலேயே பிறரை மதிக்கும் பண்பும் பேதம் பாராது தொண்டு செய்யும் உணர்வும் அவர்களிடத்தே அமைந்திருந்தன. ஓர் உயிருக்கு எவை தொடக்கத்தில் இருந்தனவோ அவையே சூழ்நிலையைப் பயன்படுத்திவளரும். இதுபற்றியே உள்ளது போகாது, இல்லது வாராது என்ற முதுமொழியும் எழுந்தது. இல்லாதவை பின்னே வாரா. திருவள்ளுவரும் இதனைத்தான்,

> '' நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தம்
> உண்மை அறிவே மிகும் ''

என்றார். அப்பொழுதிருந்தே அவர்களின் சிந்தனை சமுதாயத்தில் அழுந்தியிருந்தது. சமுதாயச் சேவைமூலம் சமயப் பணிபுரிந்து வருகிறார்கள். நமது சிந்தனை சமயத்தில் அழுந்தியிருந்தது. ஒரு குழந்தை வளரத் தாயின் அரவணைப்பும், தந்தையின் கண்காணிப்பும் வேண்டும். அது போலச் சமுதாய உணர்வில் அழுத்தமும் சமய உணர்வில் அசைவில்லாப் பிடிப்பும் அவசியமே. தருமையாதீனம் சமுதாயத்திற்கு ஒருவரையும் சமயத்திற்கு ஒருவரையும் வழங்கியது என்று கொள்ளலாம். சமுதாயப்பணி வெளியில் சென்று செய்வது தானே! அவ்வகையில் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் தவத்திரு. அடிகளாரைப் பெற்றதால் பெரும்புகழ் கொண்டது.

சமயமும் சமுதாயமும் இருகண்கள் :

மக்களுக்குச் சமுதாயம் ஒருகண் என்றால் சமயம் பிறிதொரு கண் ஆகும். இரண்டு கண்களும் ஒருபொருளையே பார்ப்பது போலச் சமுதாயவாதியும் சமயவாதியும் மக்களின் முன்னேற்றமாகிய ஒன்றையே கருதுகிறார்கள் என்பதைப் பலர் தெளிவாக உணர்வது இல்லை. சமயமும் சமுதாயமும் ஒரு நாணயத்தின் இருபக்கம் போன்றவை என்று கூறலாம். சுயநலம் இல்லையேல் பொதுநலம் தோன்றப் போவது இல்லை. பொதுநலம் இல்லையேல் சுயநலம் மதிக்கப்படுவதில்லை. அதுபோலச் சமயம் இல்லையேல் சமுதாயம் வளராது. சமுதாயம் இல்லையேல் சமயம் பயன்படாது.

பேரவைப்பணி பெருகுக :

சமுதாயப் பணிக்கும் சமய உணர்விற்கும் அடிகளார் அவர்கள் பெருந்தொண்டு புரிந்துள்ளார்கள், எனினும் பட்டிமன்றநிலையில் சிந்தித்தால் இவற்றில் விஞ்சிநிற்பது சமுதாயப்பணியே என்பது அனைவரும் அறிந்தது. அரசியலிலும் சமுதாயத்திலும் பண்பாடு உடையவராகிப் பழகி எல்லோராலும் போற்றப்படும் நிலையை

அடைந்துள்ள அவர்கள் இனிமேல் சமயத்தின் பக்கம் அதிகம் நாட்டம் செலுத்த வேண்டும். செயலற்றிருக்கும் அருள்நெறித் திருக்கூட்டம், தமிழ்நாடு தெய்வீகப் பேரவை போன்ற அமைப்புக் கள் அவர்களின் பெருமுயற்சியால் புத்துணர்ச்சி பெறவேண்டும். அவற்றால் சமயமும் சமுதாயமும் தழைக்க வேண்டும். அவர்களின் மணிவிழா நாளின் நினைவாக அவர்கள் இதனை உள்ளத்தில் கொண்டு பணிசெய்ய எல்லாம்வல்ல அருள்மிகு காளத்திப் பெருமான் அருள்புரிவாராக!

வாழ்த்து :

மணிவிழாக் கொள்ளும் அடிகளாரவர்கள் சமய சமுதாய நலனுக்காக இன்னும் பல்லாண்டுகள் நலமுடன் வாழ்ந்து சமய மறுமலர்ச்சிக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் தொண்டுகள் பல புரியவும் இவ்விழாவை இத்துணைச் சிறப்பாக நிகழ்த்திப் புகழ்கொண்ட அறிஞர்களும், அரசியல் தலைவர்களும், தொண்டர்களும் அன்பர் களும் நலம்பல பெற்று நீடுவாழவும் எல்லாம்வல்ல ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

அடிகளார் வாழ்க. அருள்நெறி ஓங்குக.

மிக நிறைவு பொருந்திய மனிதன் யார் தெரியுமா? தன்னிடம் உள்ள குறைகளை எவன் ஒருவன் அறிந்து ஒழுகுகிறானோ அவனே நிறைமனிதன் (Perfect man) ஆவான்.

— செயின்ட் அகஸ்ட்டின்.

அறிவுள்ள மனிதன் தெய்வத்தையே சட்டமாக ஏற்பான். அறிவற்ற மனிதன் சுகபோகத்தைச் சட்டமாகக் கொள்வான்.

— பிளேட்டோ.

அன்புடைமையே இச்சமுதாயத்தை இணைத்துக் கட்டிக் காக்கும் பொற்சங்கிலி ஆகும்.

கதே.

ஒரு நல்ல மனிதனின் வாழ்விலே மிகச்சிறந்த காலம் எது தெரியுமா? அவன் பிறருக்குச் செய்த சிறிய, பெரிய, தெரியாத, நினைவில் கொள்ளாத கருணையும் அன்பும் மிக்க காரியங்கள் ஆகும்.

— வோர்ட்ஸ்வர்த்.

திருவாமாத்தூர் தலச்சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்
வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

சோழ நாட்டிற்கும் தொண்டை நாட்டிற்கும் இடைப்பட்ட நாட்டை நடுநாடுஎனவழங்கினர் முன்னோர். இன்றைய தென்னார்க்காடு மாவட்டத்தின் பெரும் பகுதியையும் வடார்க்காடு மாவட்டத்தின் சிறு பகுதியையும் கொண்டது நடு நாடு.

நடுநாட்டில் தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற இருபத்திரண்டு திருத்தலங்கள் உள்ளன. திருவாமாத்தூர் 21-வது தலமாகும். இத்தலம் தென்னார்க்காடு மாவட்டம் விழுப்புரம் தாலுக்காவில் உள்ளது.

வழி:

இத்தலம் விழுப்பேரரையர் புரமாகிய விழுப்புரத்திற்கு வடமேற்கே 6 கிலோ மீட்டர் தொலைவில் பெண்ணை ஆற்றின் ஒரு பிரிவான பம்பையாற்றின் கரையிலுள்ளது. விழுப்புரம் பேருந்து நிலயத்திலிருந்து திருவாமாத்தூர் செல்லப் பேருந்துகள் உள்ளன.

தலப்பெருமை:

தேவாரத் தலங்களில் மூவர் அருளிய ஐந்து தேவாரத் திருப்பதிகங்களை இத்தலம் பெற்றுள்ளது. இத்தலத் திருப்பதிகங்களில் சில, திருமுறை இசைவாணர்களால் பலகாலும்சிறந்தெடுத்தோதப் பெற்று வருகின்றன. இரட்டைப் புலவர்கள் பாடிய கலம்பகம், அருணகிரிநாதர் அருளிய நான்கு திருப்புகழ்ப்பாடல்கள், வண்ணச் சரபம் தவத்திரு தண்டபாணிசுவாமிகள் இயற்றிய தலபுராணம் முதலியன இந்தலத்திற்கு உள்ளன. பசுக்களின்குறைய நிந்துஅவைகட்கு இறைவன் கொம்புகள் காரணத்தால் ஆமாத்தூர் எனவும் பசுக்களுக்குத் தாயூர்எனவும் இத்தலம் பெயர்பெற்றது. வடமொழியில்கோமாதுருபுரம் என வழங்கப்பெறுகிறது. வன்னிவனம்எனவும் இத்தலத்திற்குப் பெயர் உண்டு. சிவபெருமானை மட்டும் பிரித்து வழிபட்ட பிருங்கிமுனிவர் இறைவியின் வசையால் வன்னிமரமாகிப் பின் இருவரையும் வழிபட்டு அருள் பெற்றச் சிறப்புடையது. கோடி என்னும் பெயரியமுனிவரும் இராமபிரானும் வழிபட்டு அருள் பெற்றுள்ளனர். சாத்திர தோத்திர இதிகாச வரலாற்று இலக்கண நூல்களையும், புலவர்புராணம், திருவாமாத்தூர்த் தலபுராணம் முதலியவற்றையும் இயற்றியருளிய வண்ணச்சரபம் ஸ்ரீ தண்டபாணி

சுவாமிகள் தங்கித் தவமியற்றிச்சித்தி பெற்ற கௌமாரமடாலயமும் அவர்தம் ஞானசமாதிக் கோயிலும் இத்தலத்தில் உள்ளன.

கோயிலமைப்பு:

பம்பையாற்றின் கரையில்ஆமாத்தூர்ஆலயம் அமைந்துள்ளது. ஆற்றின்கரையில் உள்ளமண்டபத்தில் மால்துயர் தீர்த்த விநாயகர் எழுந்தருளியுள்ளார். வேறு எங்கும் காணாத வகையில் சுவாமி அம்பாள் கோயில்கள் கிழக்கு வீதியின் இருபுறங்களிலும் கிழக்கு நோக்கியும் மேற்கு நோக்கியும் உள்ளன.

சுவாமி கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. கோயில் வாயிலில் இராஜ கோபுரத் திருப்பணி தொடங்கி முற்றுப்பெறாத நிலையி லுள்ளது. சுவாமி கோயில் இரண்டு பிரகாரங்கள் கொண்டது. கோபுர வாயிலைக் கடந்து உள்ளே நுழைந்தவுடன் பெரிய சுதை நந்தியும், பாதாளநந்தியும், கொடிமரமும், பலிபீடமும், காட்சிதரு கின்றன. கோயிலை வலமாக வரும்போது தெற்குப் பிராகாரத்தில் தனிக்கோயிலில் தலவிநாயகரைத்தரிசிக்கலாம். அடுத்து, சிவபூசை விநாயகர் கோயில் உள்ளது. அடுத்து, திருமால், பிரமன், சிவபெரு மானைப் பூசிக்கும் நிலையில் செதுக்குச்சிற்பங்களைக்கொண்டபலகைக் கல் விளங்குகிறது. மும்மூர்த்திகளையும் வழிபட்ட மனநிறைவோடு அடுத்துத்தென் புறமுள்ளன இராமர் கோயிலைத் தரிசிக்கலாம். இங்கு இராமர், இலக்குமணர், சீதை. அனுமார் திருவுருவங்கள் புடைப்புச் சிற்பங்களாக ஒரே கல்லில் விளங்குவதைக் காணலாம். வழிபட்டு மேலும் வலம்வரும்போது மேற்குப் பிராகாரத்தில் அருணசலேசுவரர் கோயிலை வழிபடலாம். அடுத்து விளக்குவது ஆறுமுகக் கடவுள் திருக்கோயில். அருணகிரிநாதர், தண்டபாணி சுவாமிகள் முதலியோர் விரும் பிவழிபட்ட மூர்த்தி இவர். தரிசித்து மேலும் சென்றால் வடமேற்கில் தனிக்கோயிலில் காசிவிசுவநாதரைத் தரிசிக்கலாம். வடக்குப் பிராகாரத்தில் நூற்றுக்கால் மண்டபம் உள்ளது. ஈசானத்திசையில்ஈசானலிங்கமும் யாகசாலையும் உள்ளன.

வலமாக வந்து புடைவாயில் வழியாக ஆலயத்தை அடையும் போதுவாயிலில் உள்ள மண்டபத்தில் விநாயகர், அதிகாரநந்தி, துவாரபாலகர், பாலசுப்பிரமணியர் ஆகியோரைத் தரிசிக்கலாம். இம்மண்டபத்தில் நடராசப் பெருமான் எழுந்தருளியுள்ளார். தரிசித்து இரண்டாவது வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் மகா மண்டபம் ஸ்நபனமண்டபம், அர்த்தமண்டபம், கர்ப்பக்கிருகம் ஆகியவற்றோடு சுவாமிகோயில் விளங்கக்காணலாம். சுவாமிசுயம்பு மூர்த்தி பெரியதிருவுருவத்துடன் ஆமாத்தூர் அழகியராகஇறைவன் அருட்காட்சி தருகிறார். தரிசித்து முதற் பிராகாரத்தை வலம் வரும் போது தெற்கே உள்ள பிராகாரத்தில் நால்வர், உற்சவ மூர்த்திகள்

உள்ளனர். அடுத்து சப்தமாதர்களின் திருவுருவங்களும் அறுபத்து மூவரில் சிலர் திருவுருவங்களும் உள்ளன. மேற்கே விநாயகர், சகஸ்ரலிங்கம், சட்டைநாதர், ஆறுமுகர், கஜலக்ஷ்மி ஆகியோரைத் தரிசிக்கலாம். வடக்கே தனிமண்டபத்தில் பள்ளியறை உள்ளது, வாயிலில் இத்திருக்கோயிலைத் திருப்பணிசெய்த அச்சுததேவப் பல்லவர்உருவம் உள்ளது. கிழக்கே பைரவர் விளங்குகிறார். சுவாமி கோயில் கோஷ்டங்களில் தெற்கே பிட்சாடனர், தட்சிணாமூர்த்தி ஆகியோரும் மேற்கே இலிங்கோத்பவரும் வடக்கே பிர்மா, பதும பீடத்துர்க்கையும் உள்ளனர். சண்டேசுரர் தனிக்கோயிலில் விளங்குகிறார்.

வழிபட்டு வெளிவந்து வீதியைக்கடந்தால் மேற்கு நோக்கி அம்பாள் கோயிலுள்ளதைக் காணலாம். மகாமண்டபம், அர்த்த மண்டபம், கர்ப்பக்கிருகம் ஆகியவற்றோடு அம்பாள் கோயில் காட்சி தருகிறது. அம்பாள் சந்நிதியில் சிங்கம்உள்ளது. வாயிலில் விஷ்ணு துர்க்கை, சிவதுர்க்கை ஆகியோர்உள்ளனர். வெளிப்பிராகாரத்தில் தென்மேற்கு மூலையில் வட்டப் பலகை என்னும் மண்டபம் உள்ளது.

சுவாமி அம்பாள் கோயில்களுக்கிடையே பிருங்கி முனிவர் வன்னிமரமாக நிற்கும் மண்டபம் உள்ளது. இங்குள்ள வன்னிமரம் மிகவும் பழமையானது. மரத்தடியில் வன்னிமர விநாயகர் விளங்குகிறார்.

மூர்த்திகள்:

மால்துயர் தீர்த்தவிநாயகர், தலவிநாயகர், ஆறுமுகர், சந்நிதிகளும். சுவாமிஅம்பாள் சந்நிதிகளும் சிறப்புடையன. சுவாமிபெயர் அருள்மிகு அபிராமேசுவரர். அழகியநாதர், ஆண்டநாயகர் என்பனவாகும். அம்பாள் பெயர் அருள்மிகு முத்தாம்பிகை, அழகியநாயகி என்பனவாம். தீர்த்தம் ஆம்பலம் பூம்பொய்கை (குளம்). தண்ட தீர்த்தம் (கிணறு)பம்பை (ஆறு), தலமரம் வன்னியும்கொன்றையும்.

புராண வரலாறுகள்

பசுக்கள் கொம்புபெற்றது :- ஆதியில் பசுக்கள் கொம்புகள் இல்லாதிருந்தன. அவை சாதுவான விலங்குகள் ஆனமையால் கொடிய விலங்குகளின் தாக்குதலுக்கு உட்பட்டன. தம்மினம் அழிந்துவிடுமே என்றஞ்சிய பசுக்கள் ஆமாத்தூர் இறைவனை நோக்கித் தவமிருந்தன. இறைவன் பசுக்களுக்குக் காட்சி நல்கி அவற்றின் துயர் போக்கக் கொம்புகளை அளித்துதவினான். பசுக்களின் குறைகளை அறிந்து தாய்போல் அவைகட்குத் தண்ணளி செய்தமையால் இறைவன் எழுந்தருளிய இத்தலம் ஆமாத்தூர் எனப்பெற்றது.

பிருங்கி முனிவர் :

பிருங்கி முனிவர் சிவபெருமானையே வழிபடுபவர். அம்மையாரை வழிபடாதவர். தம்மைப் பிருங்கிமுனிவர் வழிபட மறுக்கிறார் என்பதை அறிந்த அம்மையார் இறைவன் திருமேனியில் இடது பாகத்தைப் பெற்றார். இறைவன் மாதொரு பாகரானார். பிருங்கி முனிவர் வண்டு உருவம் எடுத்துக்கொண்டு துளைத்துச் சிவனையே வழிபட்டார். அதைக்கண்டு சினந்த அம்பிகை முனிவரின் சக்தியெல்லாம் கெடுமாறு செய்தார். அப்போதும் முனிவர் தள்ளாடிய நிலையில் சிவனையே வழிபட முயன்றார். இருகால்களால் நடந்து வருதற்கும் இயலாதமுனிவரின் தள்ளாமைக்கு இரங்கிய பெருமான் அவருக்கு மூன்றாவதாகக் கால் ஒன்று உண்டாகுமாறு செய்தார். மூன்று கால்களோடு சிவனையே வணங்க முற்பட்ட முனிவரின் செயலுக்கிரங்கிய அம்பிகை இறைவனோடு பிரிப்பின்றி நிற்கும்சக்தியையும் சிவபெருமானோடு வழிபடுவதே முழுமையான வழிபாடு என்பதை மக்கட்கு உணர்த்த பிருங்கி முனிவரை வன்னிமரமாகுமாறு சபித்தார். முனிவர் இத்தலத்தில் வன்னிமரமாய் நின்று அம்பிகையை வழிபட்டு சாபநீக்கம் பெற்று, அம்மையப்பர் அருள் நலம் பெற்றார். முனிவர் கொண்ட வன்னிமரம் பன்னெடுங்காலமாய்ப் பழமையான தோற்றத்துடன் அம்பாள் கோயிலின் வாயிலில் உள்ளது.

போற்றிப் பாடியவர்கள் :

இத்தலத்திறைவரை வணங்கித் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடியருளிய ஐந்து தேவாரத் திருப்பதிகங்கள் இத்தலத்திற்கு உள்ளன. அருணகிரிநாதர் இத்தலத்து முருகப் பெருமான் மீது பாடியருளிய நான்கு திருப்புகழ்ப் பாக்கள் உள்ளன. இரட்டைப் புலவர்கள் திருவாமாத்தூர்க் கலம்பகம் என்ற நூலில் இவ்வூர் இறைவன் பெருமைகளைப் பாடியுள்ளனர். வடலூர் இராமலிங்க சுவாமிகள் திருவருட்பாவில் இத்தலத்தைப் பாடியுள்ளார். வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இத்தலத்தில் தங்கிப் பாடியருளிய நூல்கள் பல. சுந்தரத்தம்மையார், செந்தில் நாயக அடிகள், முருகதாச ஐயர், அசலாம்பிகை அம்மாள் முதலியோர் இத்தலத்து இறைவர் பெருமைகளைப் பாடியுள்ளனர். இரட்டைப் புலவர் கலம்பகப் பாட்டால் பம்பையாறு இத்தலத்தில் திசை திரும்பியது எனக் கூறப்படுகிறது.

ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் :

புலவர்புராணம் பாடிய வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள் அழகிய நாதரின் அருளாணையின்படி இத் தலத்திற்கு வந்து எல்லை தாண்டா நியதியுடன் தங்கி இறைவனருளை வேண்டித் தவம்புரிந்து

திருவருட்பேறு பெற்றனர். இவர் இத்தலத்தைப் பற்றிப்பாடிய புராணம் நவரத்தினத் திருப்புகழ், சதகம், யமக அந்தாதி முதலிய நூல்கள் பலவுள்ளன. அவர் சமாதி கூடிய இடத்தில் ஆலயமும் கௌமார மடமும் அமைந்துள்ளன.

வட்டப்பலகை :

தம்பியை வஞ்சித்துப் பொருள்சேர்த்த அண்ணன் பொய் மொழிந்தது காரணமாகத் தனது ஊர் செல்லும் இடைவழியில் வட்டப்பாதையின் கடவுளாணையால் நாகமொன்று கடித்து உயிர் துறந்தனன் என்று இப்பலகையின் பெருமை கூறப்படுகிறது.

தேவாரத்தில் :

இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் அருளிய இரண்டு திருப் பதிகங்களும், திருநாவுக்கரசர் அருளிய இரண்டுதிருப்பதிகங்களும், சுந்தரர் அருளிய ஒரு திருப்பதிகமும் ஆக ஐந்து திருப்பதிகங்கள் உள்ளன. ஞானசம்பந்தர் முதல் திருப்பதிகத்தில் ஆமாத்தூர் இறைவனை வழிபடாதவர்களை இழித்துப் பாடல்தோறும் பாடியுள் ளார். இரண்டாவது திருப்பதிகம் விரிவுரை அமைப்பில் இறைவ னது அருட்செயல்கள் பலவற்றையும்கூறி வினவுவதுபோல அமைந் துள்ளது. திருநாவுக்கரசர் ஆமாத்தூர் இறைவன் பெருமைகளைக் கூறி அவரை வழிபட நம்மை யெல்லாம் ஆற்றுப்படுத்திப் பாடி யருளியுள்ளார். அவர் அருளிய திருத்தாண்டகத் திருப்பதிகம் அகப்பொருளமைப்பில் உள்ளது. இறைவன் பிட்சாடனராய் வந்த போது அவரைக் கண்டு விரும்பிய அமைப்பில் அருளிச் செய்யப் பெற்றுள்ளது.

கல்வெட்டுக்கள் :

இத்திருக்கோயிலில் கோப்பரகேசரிவர்மன் (முதல்பராந்தகன்) முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திர சோழன் (கங்கை கொண்ட சோழன்), வீர ராசேந்திரன், முதற் குலோத்துங்கன்,

"பூமேவுவளர் திருப்பொன் மார்வுபுணர
நாமேவு கலைமகள் நலம் பெரிது சிறப்ப"

என்னும் தொடக்கமுள்ள மெய்க்கீர்த்தியை உடைய இராசகேசரி திரிபுவன சக்கரவர்த்தி, குலோத்துங்க சோழதேவன் முதலானோர் காலங்களின் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இக்கல்வெட்டுக் களில் இறைவர், திருவாமாத்தூர் ஆள்வார், திருவாமாத்தூர் உடைய பரமசுவாமி என்னும் பெயர்களால் குறிக்கப்படுகின்றனர்.

இத்திருக்கோயிலில், கோபரகேசரி வர்மனது ஆட்சியாண்டில் கற்றளியாகக் கட்டப்பட்டது. இத்தளியைச் செய்தவன் அருகூர் தச்சன் நாராயணன் வேற்கந்தனாகிய திருவாமாத்தூர் ஆசாரியன் ஆவன். திருச்சுற்று மண்டபத்தைக் கட்டியவன் செம்பியன் காத்தி

மானடிகள் ஆவன். கோப்பரகேசரிவர்மன் கல்வெட்டில் இவ்வூர், அருவா நாட்டு மீய்வழி வாவலூர்நாட்டுத் தேவதானம் திருவா மாத்தூர் எனவும், கோப்பரகேசரி வன்மாரன் இராசேந்திர சோழ தேவன்அல்லது கங்கைகொண்ட சோழன் கல்வெட்டில், ஜெயங் கொண்டசோழமண்டலத்துப் பனையூர் நாட்டு, வாவலூர் நாட்டுத் தேவதானம் திருவாமாத்தூர் எனவும், முதற் குலோத்துங்கசோழன் காலத்தில் கங்கைகொண்ட சோழவளநாட்டுப் பனையூர் நாட்டுத் தேவதானம் திருவாமாத்தூர் எனவும், ''பூமேவுவளர் திருப்பொன் மார்வுபுணர'' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியையுடைய இராச கேசரி, திரிபுவனசக்கிரவர்த்தி குலோத்துங்க சோழதேவர் காலத் தில் இராஜராஜ வளநாட்டுப் பனையூர் நாட்டு வாவலூர் நாட்டுத் தேவதானம் திருவாமாத்தூர் எனவும் வழங்கப்பட்டிருந்தது. இக் கல்வெட்டுக்களினல் திருநுந்தாவிளக்கு எரிப்பதற்குத் துலைநிறை செம்பொன், ஆடுகள்இவைகளையும் திருச்சந்திக்குத்திருச்சந்தனம், சீதாரி இவைகளுக்குப் பொன்னும், திருப்பதிகம் பாடுவதற்கு நில நிவந்தமும் அளிக்கப்பெற்ற செய்திகள் புலப்படுகின்றன.

இத்திருக்கோயிலில், மூன்று சந்திகளிலும், திருப்பதிகம் பாடி வருவதற்குக் குருடர்கள் பதினறுபேர்களும் அவர்களுக்குக் கண் காட்டுபார் இருவரும் ஆகப் பதினெண்மர்கள் நியமிக்கப்பட்டிருந் தனர். அவர்களுக்குத் தலைக்கு நெல் பதக்காக நாளொன்றுக்கு முக்கலமாக நாள் 360-க்கு நெல் ஆயிரத்து எண்பதின்கலமும், புடவை முதலுக்குப் பேரால் காசு ஒன்ருக, காசு பதினெட்டுக்கு காசு ஒன்றுக்கு நெல் இருபதின் கலமாகவும் வந்தநெல் 1440 கலத்துக்கு, வேலி ஒன்றுக்கு நெல் நூற்றுஇருபது கலமாக ஆமாத் தூர் இறைவர் தேவதானம் கடுவனூரில் பன்னிரண்டுவேலி நிலம் காணியாகக் கொடுக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், 'பூமேவுவளர் திருப்பொன் மார்வுபுணர' என்னும் தொடக்கமுள்ள மெய்க்கீர்த் தியை உடைய இராசகேசரி திரிபுவனசக்கிரவர்த்தி, குலோத்துங்க சோழன், தன்ஆட்சியின் இராண்டாம் ஆண்டில், தன்தேவாரத்துத் திருப்பதியம் பாடிய பொய்யாத சேவடி தேவகணநாதனை இராசராசப் பிச்சனையும் அவன் வர்க்கத்தாரையும் இத்திருக் கோயிலில் திருப்பதியம் பாடுவித்துக்கொண்டு, முன்பில் ஆண்டுகள் குருடர்களுக்கு விட்டுவரும் நிவந்தப்படி இவர்களுக்கும் கொடுக்கு மாறு கட்டளையிட்டுள்ளான். தென் இந்தியக் கல்வெட்டுத்தொகுதி எட்டு எண் 749 A. R. No. 433 of 1903. இக்கல்வெட்டு, குருடர் களைக் கவலையின்றிக் கடவுள் பக்தியில் செலுத்துவதற்கு ஒரு வழி காட்டியாகும். திருவிழா: பங்குனிமாதம் பிரமோற்சவம் நிகழ்கிறது.

கள்ளமாய் வாழ்கின்றாய் கல்நெஞ்சே!

டாக்டர் மு. சிவச்சந்திரன், எம். ஏ., பிஎச். டி., பி. எட்.
தருமபுரம்

கோயிலுக்குச் சென்றிடினும் கும்பிட்டு நின்றிடினும்
வாயில் பலசொல்லி வாழ்த்திடினும் — போயில்லில்
புக்கபின்னர் மாறுகின்ற புன்மை மனிதரையே
எக்கணத்தில் சேர்த்திடுவேம் யாம். (1)

பன்றிக்குப் பால்கொடுத்த பங்காளன் இன்னருள்தான்
என்றுமிங்(கு) உண்டதிலே ஐயமில்லை; — இன்றுள்ளோர்
தம்மை உயர்த்தார் தயாமூல தன்மத்தின்
செம்மையை ஐயுறுதல் ஏன்? (2)

உள்ளேபொய் வைத்தே உதட்டில்மெய் வைத்துநீ
கள்ளமாய் வாழ்கின்றாய் கல்நெஞ்சே! — துள்ளிவரும்
பிள்ளை மனம்கொண்ட பித்தன் உனைஎன்றும்
உள்ளிருந்து நோக்குகின்றான் ஓர். (3)

இறையை மறுத்தே இரக்கத்தைப் பேசும்
முறையை வெறுக்க முனைவீர்! — இறையுணர்வே
இல்லாதார் நெஞ்சில் இரக்கம் விளைந்திடுமோ?
நல்லோர் உணர்வரே நன்கு. (4)

என்னையே சிங்காரித் தின்னலிலே வீழ்கின்றேன்
முன்னவனே நீயறிவை, முற்றுணர்வாய்! — உன்னை
மறக்கவும் அல்லேன்! மதிக்கவும் ஒல்லேன்!
இறக்கவே வாழ்கின்றேன் ஈண்டு. (5)

கட்டுரை எண். 62

அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன், M A., D. Lit., PH. D., D. P. P. A., D. U. N., I. U.
பருத்தியூர்

நாயேனையும் இங்கு ஒருபொருளாக நயந்து வந்து
நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய்; நின்னை
[உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந்தாய்; என்னபேறுபெற்றேன்!
தாயே! மலைமகளே! செங்கண்மால்திருத்தங்கச்சியே! 61

அ. நாயேனையும் இங்கு ஒரு பொருளாக நயந்து வந்து நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய்.

(1) நாய்போன்று சிறியேனை என்னையும் ஒரு பொருளாக (திருவருளுக்கு உகந்தபாத்திரமாக) மதித்து விரும்பிநீயே நினைவில்லாமல் இப்புவிமேல் வந்து ஆட்கொண்டு விட்டாய் என்பது பொதுவான பொருள்.

(2) தம்மிடம் உள்ள சிறுமையையும், புன்மையையும் கருதித் தம்மையே 'நாயேன்' என்று கூறிக்கொள்வது பெரியோர் இயல்பு. அறிவாலும் பண்பாலும் உயர்ந்த பெரியோர்களே அங்ஙனம் கூறிக்கொள்கின்றனர். மனிதர்களிடம் காணப்படும் சிறுமையாலும், அதே நேரத்தில் அவர்கள் அடியவராகி உயரும்போது ஏற்படும் பெருமைக் குணங்களாலும் நாயுடன் எங்ஙனம் சமமாகிறார்கள் என்பதைச் சற்றுக் காணலாம்.

(3) நாய் பற்றிக் கூறும் ஓர் உருவகக்கதையின் மூலம் உபநிடதம் மனிதனின் இயல்பினைச் சுட்டிக்காட்டுகிறது. வெய்யிலில் அலைந்து திரிந்து ஓர் எலும்புத் துண்டைக் கவ்வி வந்தது நாய். நிழலில் படுத்தபடி அவ்வெலும்புத் துண்டைக் கடித்துத் தின்னத் தொடங்கியது. சிறிது நேரத்துக்கெல்லாம் எலும்பு வாயில் குத்தியதால் நாயின் வாயில் குருதி வழியத் தொடங்கியது. ஆனால் தன் வாயில் புண் ஏற்பட்டு உதிரம் வடிகிறது என்று அறியாமல் நாய் தனது குருதியினையே சுவைத்துக் கொண்டிருந்தது.

மனிதன் இன்பச்சுவையில் திளைத்திருக்கையில் தன்னாலேயே தனக்கு இடர் வருகிறது என்பதை அறியாமையால் தடுமாறுகிறான். இதுவே இவ்வுருவகக்கதையின் உட்கருத்து.

(4) தூய்மையான வீட்டில் வசதியான சொகுசான நிலையில் இருக்கும் நாயும் தனது இயல்பான அசுத்தத்தை நாடிச்செல்வது போல் மனிதனும் எவ்வளவு உயர்ந்தாலும் சிலசமயங்களில் சிறுமையினை நாடிச்செல்வது அவனது இயல்பாக இருக்கின்றது.

(5) இவற்றை யெல்லாம் உணர்ந்து, அறிந்து அக்குறைபாடுகளிலிருந்து விடுபடவிரும்பியும் அக்குறைபாடுகளை அவ்வப்பொழுது எண்ணிப் பார்த்துப் போக்க முயற்சிக்கும் நோக்குடனும் தங்களை 'நாய்' என்று சான்றோர் கூறிக்கொண்டனர். உண்மையில் அவர்கள் அக்குறைபாடுகளிலிருந்து விடுபட்டவர்களே. எனினும் அடக்கத்தால் அங்ஙனம் கூறி நம்மையும் எச்சரித்து விடுபட வழிகாட்டுகின்றனர்.

சுருங்கக்கூறின் நாய் போல் வாழாது ஆனால் அதன் நன்றியுணர்வுடன் ஆண்டவனின் திருவடியிலேயே கிடப்பதைவலியுறுத்துகின்றனர்.

(6) ''நாயிற்கடையாய்க் கிடந்த அடியேன்'' என்றும் ''நாய் சிவிகை ஏற்றியவாறு'' எனவும் மணிவாசகர் கூறிக்கொள்ளும் அடிகள் திருவாசகத்துள் பிரபலமான அடிகளாகும்.

(7) சிறப்பான பூசனைகளால் வழிபடுவோர் பலர் இருக்க, யோகத்தால் காண்போர்பலரிருக்க, தவத்தால்நாடுவோர்பலரிருக்க எளியேனையும் ஒரு பொருளாக மதித்து விரும்பி ஆண்டு கொண்டது நின் கருணையே அன்றி வேறு என்ன ?

(8) அபிராமிபட்டருக்கு அன்னை தானே அருள்செய்ய விரும்பி மாற்சால நியாயத்தால் தேடிவந்து திருவடி தீட்சை கொடுத்தாள். எனவே 'நயந்து வந்து' என்றார். நயந்து +உவந்து எனினும் ஆம்.

(9) 'நினைவின்றி' என்றது அபிராமிபட்டரின் நினைவின்மையை அல்ல. நினைவாற்றலுக் கெல்லாம் அதிதேவதையாகிய நீயும் நினைவில்லாமல் ஆண்டுகொண்டாய். கருணையினால்அங்ஙனம் செய்தாய். நீயே என்பதிலுள்ள ஏகாரம் அவளதுநினைவாற்றலைக் குறித்து நின்றது.

(10) நம்மோடு நெருக்கமான ஒருவர் பலநாள் வராமல் இருந்துவிட்டு நம்வீட்டிற்கு வந்தால் ''ஏது இவ்வளவு தூரம்? மறந்துபோய் வந்துவிட்டீர்களா?'' என்று வினவுகிறோம். அவரோடு நமக்குள்ள நெருக்கமே இங்கு வினாவாக வருகிறது.

அவர் மறந்திருந்தால் எங்ஙனம் வரமுடியும்? இங்கு நம்மிடையே உள்ள அன்புப்பிணைப்பால் எழும் விளைவதுபோல் 'நீயே நினை வின்றி ஆண்டுகொண்டாய்' என்பதும் ஒலிக்கிறது.

ஆ. நின்னையுள்ள வண்ணம் பேயேன் அறியும் அறிவுதந்தாய்!

(1) பேய்போன்ற நானும் உன்னை உள்ளபடி அறியும் அறிவுத் திறனையும் தந்து அருளினாய்.

(2) தனக்கென நிலையான இடம் இன்றித் திரிந்து உழலும் மனநிலை நோக்கிப் 'பேயேன்' என்றார்.

(3) ''பேயரே எனக்கு யாவரும் யானுமோர்
பேயனே யாவர்க்கும் இதுபேசி யென்?
ஆயனே! அரங்கா என்று அழைக்கின்றேன்
பேயனாய் ஒழிந்தேன் எம் பிரானுக்கே''

வைணவ ஆழ்வார்களில் ஒருவராகிய பேயாழ்வாருக்கு அங்ஙனம் பெயர் அமைந்ததன் காரணங்களைக்கூறும் மூன்றாந் திருப்பதிகமாகும் இது.

''பகவத் பக்தியாற் பரவசப்பட்டு நெஞ்சழிதல், கண்சுழலுதல், அழுதல், சிரித்தல், தொழுதல், மகிழ்தல், ஆடுதல், பாடுதல், அலறுதல் முதலிய தொழில்களையே எப்போதும் செய்து கொண்டு, காண்பவர் பேய் பிடித்தவர் என்று எண்ணும்படி இருந்தமையினால் பேயாழ்வார் என்று பெயர் பெற்றனர்''

பேயாழ்வார் குறித்த இவ்வுரை அபிராமி பட்டருக்கும் பொருந்தும். ஏனெனில் அவரது தனித்தன்மை கண்டு ஏனையோர் பேசிக் கொண்டதனை அறிவோம்.

(4) மேற்கண்ட மெய்ப்பாடுகளைச்சைவநெறியும் சத்திநிபாதத்தின் அறிகுறி எனக்குறிப்பிடும். அதனை எய்தியநிலையில் பேய்போல் இருந்தநானும் உன்னை உள்ளபடிஅறியும் அறிவுதந்தாய்என்கிறார்.

(5) இறைவன் விரும்பினாலன்றி நம் முயற்சியால் அவனை அறியவும் அடையவும் இயலாது. அவனருளால் அவன்தாள் வணங்கி அவனை அறிதலே இயலும். அதனை நன்குணர்ந்த பட்டரும் 'அறியும் அறிவு தந்தாய்' என்கிறார். ''தன்னை உள்ள வண்ணம் காட்டியவா'' என்பார் பின்னும்.

(6) எண்ணிலாக் கோலங் கொள்ளும் இறைவி - மகா மாயையான இறைவி அவனை அடியவருக்காக உள்ளபடி உணர்த்துகிறாள். எனவே உள்ள வண்ணம் என்றார்.

(7) ''கண்டனன் கற்பினுக் கனியைக் கண்களால்'' என்ற கம்பராமாயண அடிக்கு வைணவ உரையாசிரியர்கள் கூறும் விளக்கம் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. கண்களால் கண்டனன் என்றால் ''தன்னுடைய விழிகளால் நேரே பார்த்தான்'' என்பது மட்டும் பொருளல்ல. ''நான் செய்த தவப்பயனைத் தன்னை நானே (அனுமனே) காணவேண்டுமென்று பிராட்டி திருவுள்ளம் கொண்டாள்; அவளது கடைக்கண் பார்வை என்மீது விழுந்தது; அக்கருணைக் கண்களால்தான் என்னால் அவளைக் காண முடிந்தது'' என்ற விளக்கம் போல் இங்கு அவனை உள்ளவண்ணம் அவள் அருளால் தான் அறியமுடிந்தது என்கிறார்.

(8) ''ஞானதா'' - ''அறிவைத் தருபவள்'' என்கிறது சகஸ்ர நாமம்.

(9) ''குறியொன்றும் இல்லாத கூத்தன் தன்கூத்தை எனக்கு
அறியும் வண்ணம் அருளியவாறு யார்பெறுவார்
[அச்சோவே?''

என மணிவாசகர் இறைவன், தன்னை உள்ள வண்ணம் அறியச் செய்ததைக் குறிப்பிடுகிறார்.

இ. என்ன பேறு பெற்றேன்!

(1) 'அடியேன் எய்திய இப்பேறு எத்தகையது!'' என வியக்கிறார்.

(2) இவை எதுவும் எளிதில் கிடைப்பதல்ல. எய்தற்கரியது இயைந்ததை எண்ணி மகிழ்கிறார்; வியக்கிறார்.

ஈ. தாயே! மலைமகளே! செங்கண்மால் திருத்தங்கச்சியே!

(1) தாயானவள், மலைமகளாய்த் தோன்றியவள், செங்கண் உடைய திருமாலின் இளைய சகோதரி என்றெல்லாம் அழைத்து மகிழ்கிறார். இம்மூன்று விளிகளையும் பாட்டின் தொடக்கத்தில் பொருள் கொள்ளாது இறுதியில் பொருள்கண்டால் பாட்டின் நயத்தினை நன்கு உணரமுடியும். தாயாக இருப்பதும், மலைமகளாகத் தோன்றியதும், திருமாலின் சகோதரியாய்த் திகழ்வதுமே முதற் குறித்த அருட்செயல்களுக்குக் காரணமாக அமைகிறது.

(2) நீயே வந்து ஆண்டு கொண்டாய்! ஏனெனில், நீ தாய்! பால் நினைந்து ஊட்டுமாறுபோல் தக்க நேரத்தில் நீயே வந்ததில் வியப்பில்லை.

(3) பேயேனும் நாயேனுமாகிய எனக்கு அருள் செய்ததில் வியப்பில்லை. ஏனெனில், நீ மலைமகளாகத் தோன்றியவள். அசேதனமான - அசையாப்பொருளுக்குள்ஒன்றான மலைக்கும் கருணை கொண்டு மகளாகவே தோன்றியவள்.

(4) சாதாரணமான எனக்கு நீ வலியத்தேடி வந்து அருள் செய்ததிலும்வியப்பில்லை. ஏனெனில், நீதிருமாலின் இளையசகோதரி. உன் குடும்பமே அத்தகையது. திருமாலோ, காட்டு விலங்குகளான கரடி, குரங்கு, கஜேந்திரனுக்கும் அருளியவன். வேட்டுவர்க்கும் அரக்கனுக்கும் அருளியவள். அவனது தங்கையும் அப்படி இருத் தலில் வியப்பில்லை.

(5) திருமால் நெறியில் அனைத்துக்கும் 'திரு' என்னும் அடைமொழி கொடுத்தல் மரபு. இங்குத் திருமாலைச் சொன்ன வுடன் அவனது தங்கயையும் 'திருத்தங்கச்சி' என்றார்.

(6) 'பத்மநாப சகோதரி' என சகஸ்ரநாமம் புகழும். அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே என்பார் அபிராமி பதிகத்திலும். முகுந்தற்கு இளையவள் என்றார் முன்னும்.

(7) இப்பாடலுடன் ஒப்பு நோக்கி மகிழத்தக்க திருவாசகமும் தாயுமானவர் பாடலும் வருமாறு.

ஆய நான் மறையவனும் நீயே ஆதல்
அறிந்துயான் யாவரினும் கடையன் ஆய
நாயினேன் ஆதலையும் நோக்கிக் கண்டும்
நாதனே! நான் உனக்கு ஓர் அன்பன் என்பேன்
ஆயினேன் ஆதலால் ஆண்டு கொண்டாய்
அடியார் தாம் இல்லையே அன்றி மற்று ஓர்
பேயனேன் இது தான் நின் பெருமை அன்றே!
எம்பெருமான் என் சொல்லிப் பேசுகேனே.

— திருவாசகம்.

நாயில் ஆகிய குலத்தினும் கடைப்படும் என்னை நல்நெறி காட்டித்
தாயில் ஆகிய இன் அருள் புரிந்த என் தலைவனை நனிகாணேன்.

— திருவாசகம்.

தாயினும் இனிய நின்னைச் சரணென அடைந்த நாயேன்
பேயினும் கடையனாகிப் பிதற்றுதல் செய்தல் நன்றோ?

— தாயுமானவர் பாடல்

உடன் பிறந்தார் நலன்கள் எய்துதல் இப்பாடலின் பாராயண பலன் ஆகும்.

(தொடரும்)

நால்வர் காலம்

குடந்தை திரு. N. சேதுராமன் B. Sc., D. M. I. T,
Director, Raman & Raman Private Limited

(மலர் 44, இதழ் 7, பக்கம் 596 இன் தொடர்ச்சி.)

மாணிக்கவாசகர் இரண்டாம்வரகுணன் காலத்தில்வாழ்ந்தவர் என்று வரலாறு சுட்டுகிறது. முதல் வரகுணன் (768-811) குரு ஒரிதம் கொண்டாடிய பரம வைணவனுவான். அவன் பேரனுன இரண்டாம் வரகுணன் (863 - 911) சிறந்த சிவபக்தன் என்பதைப் பாண்டியர் செப்பேடுகளும், மாணிக்கவாசகரின் திருக்கோவை யாரும் பட்டினத்து அடிகளின் பாடலகளும் பாண்டிய குலோதயா வடமொழிக் காவியமும் உறுதி செய்கின்றன. மாணிக்கவாசகர் ''வரகுணனும் தென்னவன் ஏத்தும் சிற்றம்பலம்'' என்றும் '' சிற்றம்பலம் புகழும் மயல் ஓங்கு இருங்களியானை வரகுணன் '' என்றும் நிகழ் காலத்தில் வரகுணனைப் பற்றித் திருக்கோவையாரில் கூறுவது - ஆய்வுக்கு அணி கூட்டுகிறது.

திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும், சுந்தரமூர்த்தி நாயனரும் வாழ்ந்த காலத்தில் தில்லை நடராஜப்பெருமான் ஆலயத் திற்குள் திருமாலுக்கு என்று திருமேனி இல்லை. தேவாரங்களில் தில்லையில் திருமால் வழிபாடு இருந்ததாகக் கூறப்படவில்லை. பிற் காலத்தில் - நந்திவர்மன் காலத்தில் தில்லைத் திருச்சித்திர கூடம் எடுக்கப்பட்டது.

இராஜசிம்மன் என்னும் இரண்டாம் நரசிம்மவர்மனின் மூத்த மகனுகிய மூன்றும் மகேந்திரவர்மன் இளமையில் இறந்தான். இரண்டாம் நரசிம்மவர்மன் 728 - இல் காலமானன். அவனது இரண்டாம் மகனுன பரமேஸ்வரவர்மன் சில ஆண்டுகளே ஆட்சி புரிந்து மறைந்தனன். பரமேஸ்வரவர்மனுக்கு வாரிசுகள் இல்லாத தால், பல்லவரின் கிளையில் வந்த நந்திவர்மன் கி. பி. 730 - இல் பன்னிரண்டாவது வயதில் முடிசூட்டப்பட்டான். இவன் 65 ஆண்டு கள் ஆட்சிபுரிந்து 795 - இல் மறைந்தனன் 31. நந்திவர்மனின் காலத்தில் வாழ்ந்தவர்கள் திருமங்கை ஆழ்வாரும், குலசேகர ஆழ்வாரும் ஆவர்.

---

31 See note 9 above

வைணவர்களின் குருபரம்பரை, திருமுதியடைவு ஆகியவை களின் கூற்றுப்படி திருமங்கையாழ்வார் கி. பி. 776 - இல் அவதரித்தவர். குலசேகர ஆழ்வார் கி. பி. 767 - இல் அவதரித்தவர் 32.

கும்பகோணம் அருகே உள்ள நாதன் கோவில் என்னும் திருமால் தலம் நந்திவர்மனால் எடுப்பிக்கப்பட்டு நந்திபுர விண்ணகரம் என்று அழைக்கப்பட்டது. "நந்தி பணிசெய்த நகர் நந்திபுர விண்ணகரம்" என்று திருமங்கை ஆழ்வாரும் மங்களா சாசனம் செய்து அருளினர். தில்லைத் திருச்சித்திர கூடத்தில் பல்லவ மன்னன் திருமாலை எழுந்தருள்வித்தான்.

"பைம்பொன்னும் முத்தும் மணியும் கொணர்ந்து
படைமன்னவன் பல்லவர் கோன் பணிந்த
செம்பொன் மணி மாடங்கள் சூழ்ந்த
தில்லைத் திருச் சித்திர கூடம்"

என்று திருமங்கையாழ்வாரால் அருளப்பட்டது. எனவே தில்லைத் திருச்சித்திர கூடத்தில் திருமாலை எழுந்தருள்வித்தவன் நந்திவர்மனே (730 - 795) என்னும் செய்தி உறுதிப்படுகிறது.

"தில்லை நகர்த் திருச்சித்திர கூடந் தன்னுள்
அந்தணர்கள் ஒரு மூவாயிரவர் ஏத்த......"

என்று குலசேகர ஆழ்வாரும் தில்லைத் திருமால் மீது பாடியிருப்பதும் கணிக்கத்தக்கது. எட்டாம் நூற்றூண்டின் பிற்பகுதியில் தில்லையில் திருமாலின் திருமேனி வைக்கப்பட்டது என்னும் இச்செய்தி மிக முக்கியமானது,

திருமங்கையாழ்வாருக்கும், குலசேகர ஆழ்வாருக்கும் காலத்தால் பிற்பட்டவர் மாணிக்கவாசகர். தில்லையில் திருமாலின் திருக்கோலத்தைத் திருக்கோவையாரில் மாணிக்கவாசகர் குறிப்பதும் - நம் ஆய்வுக்குத் துணை நிற்கும். "வரங்கிடந்தான் தில்லையம்பல முன்றிலில் அம் மாயவனே" என்பது மாணிக்கவாசகரின் அருள் வாக்கு.

வரகுணன் – சிவபக்தன்

863 - இல் முடிசூடிய வரகுணன் சோழநாட்டை வென்றான். வரகுணனின் கல்வெட்டுக்கள் திருநெய்த்தானம், திருக்கோடிக் காவல், திருக்காட்டுப்பள்ளி, கும்பகோணம், ஆடுதுறை, திருவிசலூர் ஆகிய ஊர்களில் காணப்படுகின்றன. கி. பி. 885 - இல் நடந்த

---

32 For the dates of Alwars - See Swamikkannu Pillai Indian Ephemeris Volume I Part I Page 489.

திருப்புறம்பியப் போரில் வரகுணன் தோல்வி அடைந்தான். பல்லவரும், சோழரும் வெற்றி அடைந்தனர். வரகுணன் இராச்சிய பாரத்தைத்தனதுதம்பி பராந்தகவீரநாராயணனிடத்துஒப்படைத்து விட்டுச் சிவதர்மத்தில் மூழ்கினான்.

வரகுணனுக்கு வாரிசுகள் இல்லைபோலும். பராந்தக வீரநாராயணன் 911 - இல் இறக்கவே அவன் மகன் ராஜசிம்மன் பாண்டி மன்னன் ஆனான். இவன் 931 வரை அரசாண்டான். பின்பு சோழர்களுக்குப் பயந்து ராஜசிம்மன் சிங்களத்துக்கு ஓடிவிட்டான்.

ராஜசிம்மனுக்கு ஆண்மக்கள் இருவர் இருந்தனர். ஒருவன் சுந்தரபாண்டியன். மற்றவன்வீரபாண்டியன். சுந்தரன் இளமையில் இறந்தனன். அவன் பெயரில் ஒரு பள்ளிப்படைக் கோயில் கட்டப் பட்டது 33. வீரபாண்டியன் 938 முதல் 959 வரை மதுரையில் அரசு புரிந்தான். 944 - இல் சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் போர் நடந்தது. வீரபாண்டியன் - சோழமன்னன் முதல் பராந்தகனின் மகனை உத்தமசீலியைக் கொன்றதால் "சோழன் தலை கொண்ட வீரபாண்டியன்" என்று அழைக்கப்பட்டான். சோழர் களும் வாளாயிருக்கவில்லை. கி. பி. 959 - இல் நடந்த போரில் சுந்தர சோழனின் மகனாகிய ஆதித்ய கரிகாலன், வீரபாண்டியனைக் கொன்றான். "வீரபாண்டியன் தலைகொண்ட பரகேசரி" என்றும் அழைக்கப்பட்டான் 34. கொலையும், சண்டையும், சச்சரவும் நமக்கு எதற்கு? ஆகவே இவ்வாராய்ச்சியை இத்துடன் நிறுத்திக் கொள் வோம்.

நால்வர் காலம் - ஆய்வின் சாரம்

திருநாவுக்கரசர்	...	580 - 660
திருஞானசம்பந்தர்	...	640 - 656
சுந்தரர்	...	700 - 728
மாணிக்கவாசகர்	...	863 - இல் பலசாத்திரங்கள் அறிந்த சிறந்த சிவனடியாராகத் திகழ்ந்தவர். 863-க்குப்பின் இரண்டாம் வரகுணனிடம் அமைச்சராகப்பணியாற்றியவர்.

33 S. I. I. XIV Pallimadam inscriptions

34 For these Historical accounts see N. Sethuraman's "Early Cholas" edition 1980.

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகளின்

திருவருட்பாத் திரட்டு

(பொழிப்புரையுடன்)

வித்துவான் திருமதி. ப. நீலா எம். ஏ., எம், ஃபில்.,

(மலர் 44, இதழ் 7, பக்கம் 589 இன் தொடர்ச்சி)

கச்சைப் பழித்துக் கனத்துச் சினத்துக்
 கதித்திலகுபச்சையாகிக்
கண்கறுத் திடைவெளி யிலாதிபத் துணைமுலைக்
 கன்னியர்கள் தம்மாசையும்
வைச்சுப் புதைத்துத் திரட்டியணு வளவுமெதிர்
 வந்திரப் பினும் இடாது
வாடியே தேடியே சாடியே மூடிய
 மயக்கமுறு பொன்னுசையும்
இச்சகத் தியாவையு மெனக் கெனக் கென்றே
 யிருந்துவிடு மண்ணுசையும்
இந்திரிய விடயமய மல்லாது பேரின்ப
 இனிய வாழ் வுறுவதுண்டோ
அச்சத்து மாளாது சச்சிதா னந்தசிவம்
 அமலகே வலமருவவே
அருட்கடை செய் தாளுவாய் கேதார கௌரிநின்
 அடிபரவு மடிமையென்றே. (7)

(பொ - ரை) கேதாரகௌரியம்மையே! மார்பிலணியும் கச்சிற் கடங்காமல், அதனைப் பழித்துப் பின் கோபித்துப் பருத்துவிளங்கும் - கண்கள் மட்டும் கறுத்து இடைவெளியில்லாத இரண்டான யானையை ஒத்த முலைகளையுடைய கன்னியர்கள்பால் கொண்ட ஆசையும், திரட்டிப் புதைத்து வைத்து எதிர்வந்திரப்பினும் அணு வளவும் இடாது, வாடித்தேடிய பொருளைச் சாடியிலிட்டு மூடிய மயக்கந்தரும் பொன்னுசையும், இவ்வுலகில் யாவும் எனதே என்றிருந்துவிடு மண்ணுசையும், பொறிகளுக்குப் பொருளாகி இன்பந்தருமல்லாது பேரின்ப இனிய வாழ்வைத் தருமோ? இப்படியான மூவாசையின் அச்சத்திலேயே மாண்டுபோகாதபடி உன்னடி

மையாகிய என்னைச் சச்சிதானந்த சிவம் எனும் மலமற்ற தனிப் பொருளை மருவிட அருட்கடை செய்தாளுக.

(கு - ரை) ஐம்பொறிக்கும் இன்பந்தரும் பெண்ணாசையை முதலில் கூறினர். இதன்பின்னாகவே பொன் - மண்ணாசை வருவது கண்கூடு.

ஒருங்கிய சாயல் நெருங்கியுள் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்து
எய்த்திடை வருந்த எழுந்து புடைபரந்து
ஈர்க்கிடை போகா இளமுலை... (திருவா. போற்றி - 31 - 34)

எனத்திருவாசகத்துள் பத்துச்சீரில் இதன் பெருமை கூறப்பட்டது. பணத்தைத் தேடிமூடி வைத்தல் - 'பாடுபட்டுத் தேடிப்பணத்தைப் புதைத்து வைத்த கேடுகெட்ட மானிடரே' - (நல்வழி - 22) மூவாசையும் பொல்லாததே - மாவேழ் சனனங்கெட மாயைவிடா, மூவேடணை என்று முடிந்திடுமோ' - (கந். அனு. 39) 'பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன்' (தாயுமா. 194) 'பொன்னை - அரிவையரையே நினையும் அன்பிலேற்கு உன்தாள் தருவையோ சொக்கநாதா' - என ஸ்ரீ குருஞானசம்பந்தரும் அருளுகிறார். சாடி - பெரியகொள்கலம்.

'தொடுதல் ஓம்புமதி முதுகட் சாடி' (புறம். 258)

'முன்றிலிருந்த முதுவாய்ச் சாடி' (புறம். 319)

அச்சத்து மாளாது - இம்மூன்று விடயங்களைத், தேடுவதிலும் காப்பதிலும் அனுபவிப்பதிலும் - துன்பமும் அச்சமும் இருத்தல் வெளிப்படை.

பெண்ணாசை மண்ணாசையும், இரணியத்தாசையும் சீயென்று விட்டெறிந்தால் - இடரில்லை என்பார் இவரே பிறிதொருபாட்டில். (13—6) அமலகேவலம் - மலநீக்கம் பெற்ற தனிநிலை.

வானுற்ற மழைமொக்குள் நிகர் செல்வம் நிலையென
மகிழ்ந்துறையு மூடர்முன் போய்
வாய்திறந் தெண்ணன்கு பல்லையுங் காட்டியே
மாரனீ சூரனென்றே
தானுற் றெடுத்தெடுத் தொருகோடி வாசகஞ்
சாற்றமுகம் நோக்கிடாது
சப்பாணியோ நொண்டி ஊமையோ செவிடனோ
*தருமந்த காச னிவனோ

* தகு (பா - ம்)

காணுற்ற மிருகமோ வுயிரிலாத் தேகமோ
$காணுமிது என்கொ லென்றே
கருதிட மதத்தினுறை சிறுபேதை தங்களைக்
கண்டுதுதி செய்திடாமல்
ஆனிற் சிறப்புற்ற தேனுவின் கன்றென்ன
அமலசுக மேவிவாழ
அருட்கடைசெய் தாளுவாய் கேதார கௌரிநின்
அடிபரவு மடிமையென்றே. (8)

(பொ. ரை) வானிலிருந்து பொழியும் மழைநீரில் காணும் மொக்குள் நிகர் செல்வத்தினை நிலைத்ததென மகிழ்ந்து வாழும் மூடர்கள் முன்போய் - வாய்திறந்து முப்பத்திரண்டு பற்களையும் காட்டி மாரன்நீதான் சூரன்நீதான் என்று எடுத்தெடுத்து ஒரு கோடிவார்த்தைகள் சொல்லவும் முகம் பார்க்காமல் நிற்பவனைக் காணும் போது இவன் சப்பாணியோ, நொண்டியோ, ஊமையோ செவிடனோ - முகம் மலர்ந்து சிரித்திடாத மரமோ, காட்டில் வாழும் விலங்கோ, உயிரே இல்லாத தேகமோ, எதிரே காணும் இது என்னவோ என்று கருதிடுமாறு ஆணவத்துடனிருக்கும் சிறுபேதை யர்களைக்கண்டு துதிசெய்திடாமல் பசுவுள் சிறந்த காமதேனுவின் கன்றுபோல மலவாதனையின்றிச் சிறப்புற்று வாழக் கடைக்கண் அருளைத் தந்தாளுக.

(கு-ரை) நிலைத்து நிற்காத இளமை, செல்வம், யாக்கைகளை நீரிற் குமிழிக்கும், அலைக்கும், எழுத்துக்கும் உவமையாக்குவது இயல்பே.

'நீரிற் குமிழி இளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டும் நெடுந்திரைகள் - நீரில்
எழுத்தாகும் யாக்கை' - (நீதி. விள - 1)

யாசித்தலின் கொடுமை - ஈயென இரத்தல் இழிந்தன்று - (புறம் - 204)

கரவொடு நின்றூர் கடிமனையில் கையேற்று
இரவொடு நிற்பித்த தெம்மை - அரவொடு
மோட்டாமை பூண்ட இறைவனை முன்வணங்க
மாட்டாமை பூண்ட மனம் - (தண்டி. மேற்கோள் பாடல்)

'இல்லாமை சொல்லி ஒருவர் தம்பாற் சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல் ...., பாதங்கள் சேர்மின்களே'
(அபி. அந் - 45)

$ காணிலிது (பா - ம்)

ஒருகோடி வாசகம் சாற்றல் - ' நிதிக்குப் பிங்கலன் பதத்துக் கிந்திரன் நிறத்தில் கந்தனென் றினைவோரை - நிலத்தில் தன் பெரும் பசிக்குத் தஞ்சமென் றரற்றித் துன்பம் நெஞ்சினில் நாளும் புதுச்சொற் சங்கமொன் றிசைத்து' (திருப்பு - 50)

' மிடுக்கிலா தானை வீமனேவிறல் விசய னேவில்லுக் கிவனென்று
கொடுக்கி லாதானைப் பாரி யேயென்று கூறினும் கொடுப்பாரிலை '

(சுந்தரர் 7-34-2)

என்று பலரும் கூறியுள்ளனர். கொடுக்காமைக்குக் காரணம் - 'ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல்' என்று கேட்பார் வள்ளுவர். (குறள் - 228)

தேனுவின் கன்று போலச் சிறப்புற்று வாழ்வதை,

' எண்ணிறந்த தேவர்க்கும் யாவர்க்கும் பயன்சுரக்கும் இமையோர்
நாட்டுப்புண்ணியவான் தன்புனிற்றுக் கன்றினுக்குக் குறையேது'

(திருவிளை. மலையத். அழை - 30)

என்று காட்டுவார் திருவிளையாடலில்.

மத்தமா கரியொலியும் வாசிப் பெருக்கொலியும்
வருமிரத மூரு மொலியும்
மைந்தர்பருவ ந்தனின் மணஞ்செயொலியும்மகளிர்
மங்கலத் தொலியும் வண்டு
தித்திமிதி யென்றுநற வுண்டுவிளை யாடுந்
திருத்தவொலி நீத்த வொலியுஞ்
செந்தமிழ்ப் புலவருட னோராறு சாத்திரஞ்
செப்பொலியும் வேத வொலியுஞ்
சுத்தியொடு பிரமரிந் திரன்முதலி னோர்கள் நனி
துதிசெய் சிவகீத வொலியுந்
தொண்டர் அர கரவென்று பல்லாண் டிசைத்திடுந்
துய்யமந் திரவொலியுடன்
அத்தனார் திருவிழா வொலி பெருகு காசிவாழ்
அங்கயற் கண்ணியுமையே
அருட்கடைசெய் தாளுவாய் கேதார கௌரிநின்
அடிபரவு மடிமை யென்றே. (9)

(பொ - ரை) மதமும் பெருமையும் மிகுந்த யானையினொலியும், குதிரைகளின் மிகுந்தவொலியும், தேரேறிச் செலுத்து மொலியும், பருவம்வந்த மைந்தர்கள் மணஞ்செய்யொலியும், மகளிர்வாழ்த்தும் மங்கலவொலியும், வண்டு தேன்குடித்த களிப்பால் விளையாடும் போதெழும் ஒலியும், புதுவெள்ளத்தி னொலியும், அந்தணர்களின் வேதவொலியுடன் செந்தமிழ்ப் புலவர்கள் ஓராறு சாத்திரங்களைச் செப்புமொலியும். முப்பொறித் தூய்மையுடன் பிரமன் இந்திரன் முதலியவர்கள் நன்கு துதித்திடும் சிவகீத ஒலியும், தொண்டர்கள் அரஹர என்று பல்லாண்டிசைத்திடும் தூய மந்திரவொலியுடன் – தலைவனும் பெருமானின் திருவிழாவொலி பெருகி ஒலிக்கும்காசியில் வாழும் அங்கயற்கண் உமையே ! கடைக்கண் அருள்தந்து என்னை ஆண்டிடுக.

(கு-ரை) 'ஆரணங்களே அல்ல மறுகிடை-வாரணங்களும் மாறிமுழங்குமால்' (பெரிய. திருநக-10) என வேத-வேழமுழக்கங் களைப் பார்க்கிறோம். வாசி-குதிரை. 'வாசி வாணிகர்க்குத் தென் னன் வெண்டுகில் வரிசையாக வீசினன்' - (திருவிளை. நரிபரி. 123) நீத்தம் - வெள்ளம். 'உழவரோதை மதகோதை உடைநீரோதை' (சிலப்-கானல்-4) செந்தமிழ்ப் புலவருடன் - இருக்கும் 'உடன்' என்பதை வேதவொலி 'யுடன்' என்று என்றிணைத்துக் கொள்க. இருந்தவாறே பொருள்காண இடர்ப்பாடுள்ளது. ஆறு சாஸ்திரம்-ஆறு அங்கம் - சிக்ஷை, வியாகரணம், சந்தம், நிருத்தம், சோதிடம், கற்பம் என்பன. சுத்தி-திரிகரணசுத்தி; மனமொழி மெய்த்தூய்மை. அத்தனுர் திருவிழா ஒலி-இத்துணை ஒலிகளுடன் பின்னும்சிறந்தது- என்கிறார்.

'தேரொலிக்க மாவொலிக்க திசையொலிக்கும் புகழ்க்காஞ்சி'
(பெரிய-திருக்குறி-113)

எனச் சேக்கிழாரும் காட்டுகிறார்.

திங்களணி செஞ்சடா டவிபுனையும் விசுவேசர்
திருவருள் சிறந்து வாழி
திகழ்விசா லாக்ஷியுமை வாழிசண் முகனுடன்
சிறுதுண்டி ராஜன் வாழி
சங்கமுற் றுயர்கங்கை நதிவாழி வயிரவன்
சரணும் புயங்கள் வாழி
தருஞான வாவியும் வாழிமா தவனுடன்
தகுதண்ட பாணி வாழி

புங்கவர்கள் பணிகாசி நகர்வாழி யாரண
புராண சாத்திரமும் வாழி
புகழ்மேவு மிந்நகரி லன்னதா னஞ்செய்யும்
புண்ணியர்க ளென்றும் வாழி
அங்கங்கு தருமநிதி தருவோர்கள் வாழவே
அவிமுத்தம் வாழுமுமையே
அருட்கடைசெய் தாளுவாய் கேதார கௌரிநின்
அடிபரவு மடிமை யென்றே. (10)

(பொ-ரை) சந்திரனை யணிந்த சிவந்த சடைக்காட்டினையுடைய விசுவேசரின் திருவருள் சிறந்து வாழி. விளங்கும்விசாலாட்சி வாழி. ஆறுமுகப்பெருமானுடன் துண்டி ராஜகணபதி வாழி. சங்குகள் வாழும் கங்கைநதி வாழி. வயிரவப் பெருமானின் திருவடித் தாமரைகள் வாழி. 'ஞானவாவி' வாழி. மாதவனுடன் தகுதியான தண்டபாணி வாழி. சிறந்தவர்கள் பணிகின்ற காசிநகர் வாழி. வேத புராண சாஸ்திரங்கள் வாழி. அங்கங்குமிருந்து தருமம் செய்பவர்கள் வாழுமாறு அவிமுத்தத்தில் இருந்து அருள்பவளே! கடைக்கண் அருள் தந்து என்னையும் ஆண்டிடுக.

(கு-ரை) 'திங்களணிசடை - திங்களணி திருவாலவாய் எம் மண்ணல் - என (திருவிளை. நூற்பயன்) வருவது காண்க. புங்கவர்கள் - தேவர்கள். காசியில் தருமம் செய்வோர் மட்டுமின்றி - மற்ற தலங்களிலிருந்து அறம் செய்வோரையும் அம்மை காக்கிறாள் என்பது உண்மைதானே. ஆரணம் - புராணம் - இவை காசியின் மேன்மையைச் சொல்வதால் அவைகளும் வாழட்டும் என்கிறார். காசியின் பெருமை: காசி, வாரணசி, மகாஸ்மாசனம், கௌரிமுகம் ஆனந்தகானம், அவிமுத்தம், ருத்ரவாசம் - என்றபல பெயர்கள் உண்டு. பிரகாசத்தால் காசி. வாரண - அசி என்ற ஆறுகள் கலப்பதால் வாரணசி. ஐம்பூதங்களும் தத்தம் காரணங்களில் அடங்கி இருத்தலால்மகாஸ்மசானம். சக்திபீடங்களில்முகபீடமாயிருக்கவே- கௌரிமுகம். வசிப்பவர்கள் சிவானந்த வாழ்வு பெறுவதால் ஆனந்தகானம். பெருமான் பெருமாட்டி இத்தலத்தைப் பிரியாதிருக்கவே அவிமுத்தம், சிவசாரூப்யம் பெறுவதால் ருத்ரவாசம் - எனப் புராணம் இதன் பெருமை பேசும்.

(தொடரும்)

காரைக்காலம்மையார் -
- ஓர் சமய புரட்சிவாதி

திரு. இரா. பொன்னு எம். ஏ., எம். ஃபில்.,

"எனக்கினிய எம்மானை ஈசனையான் என்றும்
மனக்கினிய வைப்பாக வைத்தேன்.

தெய்வம் தொழாது கொழுநனையே தொழுதேத்தும்வாழ்வியல் நெறியினைக்கொண்டிலங்கியதுபழந்தமிழர் பண்பாடு. எனவேதான் 'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்' எனச்சிலம்பு ஒலிக்கலாயிற்று. கற்புக்கடம் பூண்டு களிநடம் புரிந்த தமிழ் மாதர் உயர்ந்தோரால் போற்றப்பட்டனர்.

ஆனல் கணவனையே கண்கண்ட தெய்வமெனப் போற்றி நிற்கும் நிலைக்கு மாருக "நற்பெரும் தெய்வம் து" எனக்கரம் பற்றியகணவனே வணங்கிடும் படியாகவையத்துள்ளே தெய்வமாக வாழ்ந்து தமிழர் சமய வாழ்வில் ஒரு புதுமையான புரட்சியையே படைத்தவர் காரைக்காலம்மையார் ஆவார்.

அப்பர் அடிகளார் சைவம் ஏகிடத் திருத்தொண்டாற்றிய திலகவதியாரும், பாண்டிய நாட்டில் சைவம் தழைத்தோங்கிடக் காரணமான மங்கையர்க்கரசியாரும் ஆரூரரைத் தமிழ்ச்சைவ உலகுக்கு ஈன்றஇசைஞானியாரும்சைவபக்தி இயக்கத்தில்சிறந்ததோர் இடம் பெற்று விளங்கினும், அவர்கள் யாவரையும் காட்டிலும் தனது பண்பட்ட பக்தியினல், சைவம் வைணவம் நடத்திய பல்லவர்காலபக்தி இயக்கத்துள் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட பெண் அடியார்களுள் ஓர் உயரிய இடம் பெறுபவர் காரைக்கால் அம்மையாரே.

"காரைக்காலில் தோன்றி, புனிதவதி என்ற நாமம் பெற்று, பரமதத்தன் மனையாளாகி, இல்லறத்தை நல்லறமாக ஏற்று வாழ்ந்துவரும் நாளில், 'தெய்வந் தொழுகுலம்' என எண்ணித் தொழுது நின்றதுடன், 'யான் உனதருளால் வாழ்வேன்' எனப் பணிந்தகணவன் நிலைகண்டு ஊனுடை வனப்பைஉதறி, வானமும் நிலனும் எல்லாம் வணங்கிடும் பேய் வடிவம் தாங்க, சிவனார் திருவடி பணிதலிலே எஞ்சிய வாழ்வைக் கழித்து, 'நம்பன் திருமலை நான் மிதியேன்' எனத்திருவாலங்காடு நற்பதிதனைத் தலையினலே

நடந்துபுக்கடைந்து, இறைவனல் ஆட்கொள்ளப்பட்டு' அம்மையே என அப்பனல் அழைத்திடும் பேறு பெற்று விளங்கினர்' என்பது அம்மையார்தன் வாழ்வினைப்பற்றித் திருத்தொண்டர் புராணம் தரும் செய்தியாகும்.

அம்மையார் வாழ்ந்தது சமண சாக்கிய சமயங்கள் தமிழ் நாட்டில் மேலாதிக்கம் செலுத்திய காலப்பகுதியாகும். இல்லறம் இழித்துரைக்கப்பட்டதுடன் துறவறம் திணிக்கப்பட்டுத் தமிழர் தம் இல்வாழ்க்கையில் ஒரு வறட்சி நிலை நிலவிய காலமாகும். காதலும் வீரமும் கண்ணெனப்போற்றி இப்பிறப்பிலே இன்பம் கண்ட தமிழ்ச் சமுதாயம், மறுபிறப்பு வாழ்க்கைக்காக 'வெறுமை' நிலைக்குள் தள்ளப்பட்டிருந்தது. நிர்வாணம் இல்லையேல் வீடுபேறு கிடையாது என்ற கொள்கையினராய் - பெண்கள் இப்பிறப்பில் வீடுபேறு அடைந்திட இயலாது என்ற எண்ணமுடையராய் - பெண்களை அவதூறு சொல்பவர்களாய் - நிர்வாணக்கோலத்தினராய்த் தமிழ் வீதிகளில் அலைந்த திகம்பர சமணர்கள் தமிழர்தம் வாழ்வியல் நெறிக்குப் புறம்பானதொரு வாழ்க்கை நடத்தினர்.

இந்நிலையில் சமணர்களின் சமய நெறிக்கு ஒரு சவாலாக இல்லறம் நின்று, தொழுகுலங் கண்டு, நிர்மலனின் திருவடி சேர்ந்து உய்ந்திடும் உயரிய வாழ்க்கையினை அம்மையார் தனது இறைபக்திவாயிலாகப் படைத்துத் தமிழர் சமய வாழ்வில் ஒரு புரட்சியையே தோற்றுவித்துள்ளார்.

'நற்பெரும் தெய்வமாது' என மணுளனே போற்றிடும் வகையில் பக்தி நெறியில் கலந்து, 'அம்மை' யாய் அப்பனுக்குப் பக்கமுற்று, மறுப்பிறப்பென்ன! இப்பிறப்பே போதும்! என்ற சிந்தையினராய் இறைவனை எண்ணி மகிழ்வுற்ற அம்மையார் 'மறவாது வாழ்வாரை மண்ணுலகத்தென்றும் பிறவாமைக் காக்கும்' பிரானல் ஆட்கொள்ளப்பட்டு வாழ்வின் முழுப்பயனையும் எய்தினர்.

மறுப்பிறப்புக்காகக் காத்திராது, இப்பிறப்பிலே 'பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல் சிறந்து செஞ்சடையான் சேவடிக்கே ஏழு பிறப்பும் ஆளாவோம்' என்று இறைவனைக் கண்ணாரக்கண்டு, கையாரக்கூப்பி எண்ணார எண்ணிநின்ருர்.

எந்தையாய், இனியனுய், சிந்தையுள் தோன்றும் ஆதிபகவனுய் அறிவானும், அறிவிப்பானும், அறிவாய் அறிகின்ற மெய்ப் பொருளுமாய் நின்ற அட்டமூர்த்தியாய் விளங்கும் இறைவனின் அருள் ஒளியினைத் தூய அன்பினல் பெற்று இனிமைகண்டார்,

எனவே சமணம்தந்த மறுபிறப்புக்கொள்கைக்கும் ஆண்பெண் வேறுபாட்டு நெறிக்கும் அப்பால்சென்று "பிறவாமை வேண்டும்" என்று இறைவனிடம் விண்ணப்பித்ததுடன், மீறி

"மீண்டும் பிறப்புண்டேல் - உன்னை
என்றும் மறவாமை வேண்டும்"

என்று வேண்டுகோள்விடுத்தார். பிறப்பறுக்கும் பெருமானைப் பக்தியினால் உய்த்துணர்ந்த அம்மையார்,

"இனியோநாம் உய்ந்தோம் இறைவன் அருள் சேர்ந்தோம்
இனியோர் இடரில்லோம் நெஞ்சே — இனியோர்
வினைக்கடலை யாக்குவிக்கும் மீளாப் பிறவிக்
கனைக்கடலை நீந்தினோம் காண்"

எனப்பிறவிக் கடலை நீந்தியதாகவே கூறுகின்றார். "இறைவனே எவ்வுயிரையும் தோற்றுவிப்பவன், இறைவனே உயிர்கள்யாவினுக்கும் இரங்குபவன்". எனவே "எந்தாய்" என இரங்கிடும் அடியார்களின் வெந்துயர் யாவையும் மாற்றி அருளுபவன் எனப்பக்தியால் உணர்ந்து எப்பிறப்பிலும், எவ்வுயிராய்ப் பிறந்திடினும், அருள் செய்திடுவான் இறைவன் என்பதை நன்கறிந்திருந்தார்.

ஆகவேதான் இறைவனுக்காளாகிடும் நிலைஒன்றினையேநினைத்திருந்து ஒன்றையே துணித்தொழிந்து, ஒன்றையே உள்ளத்துள் கொண்டிருந்தார். இறைவனே எவ்வுயிர்க்கும் நாயகனாக விளங்குபவன் என்றுணர்ந்து அவர்க்கே ஆளாகி அவரது அருளாலே மெய்ப்பொருள்கண்டு பிறவிப் பெருங்கடல் நீந்தினர்.

இங்குக் கூர்ந்து நோக்கத்தக்கது யாதெனில், பெண்மைக்கு மோட்சம் மறுக்கப்பட்ட காலச்சூழலில், அம்மையார் இறைவனிடம் அன்பால்கலந்து சமண சமயவாதிகளின் நிர்வாணக் கொள்கைக்கு எதிராகப்புரட்சியே படைத்துள்ளார். இறைவனிடம் அன்பாகிப் பிறவிக்கடல்நீந்துவதற்கு எவ்வுயிராகப்பிறக்கிறோம்என்பதுமுக்கியமல்ல; பல்லுயிர்க்கும் படைப்பாளியான பரமனிடம் பக்திசெலுத்துவதன் மூலம் எண்ணியதெய்தி உய்ந்திடலாம் என்பதே கவனிக்கத்தக்கது. எனவேதான் 'புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா! உன்னடி என்மனத்தே வழுவாதிருக்க வரம் தரல்வேண்டும்' என்று அப்பர் பெருமானும் இறைவனிடம் விண்ணப்பிக்கின்றார்.

ஆராத அன்பினேடு அண்ணலை ஏத்தி, அவர்க்கே ஆளாகிய அம்மையாரின் பக்தி நெறி தமிழர் சமய வாழ்வினில் பெண்ணின் உரிமையை நிலைநிறுத்தியது.

இம்மைக்கும் அம்மைக்கும் எல்லாம் அமைந்தோமே
எம்மைப் புறம் உரைப்ப தென்?

என்ற கேள்விக்குறியுடன் அம்மையார் 'பக்தி' வாயிலாகப் பெண்களுக்குச் சமய வாழ்வில் சமத்துவம் படைத்துள்ளார்.

தமிழ்நாடு ஹிந்து ஆலயப் பாதுகாப்புக் கமிட்டி

(சென்ற இதழ் 280 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

6. ஹிந்து ஆலயங்களின் தணிக்கைகள் பல்லாண்டுகளாக முடிக்கப்படாமல் இருப்பதால், ஆலயங்களில் நடக்கின்ற சட்ட மீறல்கள், முறைகேடுகள், ஒழுங்கீனங்கள் தெரியாமல் இருக்கின்ற காரணத்தால் உடனடியாக, முடிக்கப்படாமல் உள்ள கணக்குகள் முடித்து, அந்தந்த ஆண்டு கணக்கின் ஆடிட் ரிப்போர்ட்டுகளை, பக்தர்களுக்கும், கட்டளைதாரர்களுக்கும், எங்கள் கமிட்டிக்கும் அனுப்ப ஏற்பாடு செய்யவேண்டுமென, ஹிந்து சமய அறநிலையத் துறையினரை வேண்டியும்,

7. ஹிந்து ஆலயங்களில் உள்ள சொத்துக்கள், வருமானங்கள் செலவினங்கள் விவரமாக அந்தந்த ஆலயங்களில் வெளியிட வேண்டும் என்றும் நகல்கள் சம்பந்தப்பட்ட எல்லோருக்கும்அனுப்ப வேண்டும் என்றும், வேண்டியும்,

8. ஆலய மேம்பாட்டு திட்டத்தின்கீழ் பெறப்பட்ட நிதியிலிருந்து உடனடியாக வருமானமின்றி உள்ள ஆலயங்களுக்கும், அதன் பணியாளர்க்கும் உதவவேண்டுமென்றும்,

9. தமிழக, ஹிந்து ஆலயங்களில் வழங்கப்படும் திருநீறு, குங்குமப் பிரசாதங்கள், சுத்தமாகயில்லாததால் பக்தர்களின் நெற்றிகள் சூடுபோட்டதுபோன்று, கருப்பு அடித்து விகாரமாகத் தென்படுவதால், உடனடியாக, தூய பிரசாதங்கள் ஆலயங்களில் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென அறநிலையத்துறையை வேண்டியும்,

10. மதுரை சித்திரைத் திருவிழாவில், ஹிந்து சமய அறநிலையத்தின் சார்பாக, மண்டகப்படி ஏற்படுத்திய, மாண்புமிகு அறநிலையத்துறைஅமைச்சர்அவர்களைப்பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருச்செந்தூர்,
31–5—1985.

N. K. தர்மராஜ்,
ஜெனரல் செகரெட்டரி.

கதிரவன் குடும்பம்

7. சனிக் கிரகம்

கதிரவன் மண்டலத்தில் வியாழனுக்கு அப்பால் ஏழாம் பிராகாரத்தில் சுற்றிவரும் கோள் சனியாகும். ஆங்கிலத்தில் சனிக்கிரகம் " சாட்டர்ன் " (Saturn) என அழைக்கப்படும். இஃது ஒருவெளி நிலைக்கோள் (Outer Planet) ஆகும். இக்கிரகமும் வானவெளியில் நல்லபிரகாசத்துடனும் அழகுடனும் காட்சியளிக்கிறது. சாதாரணமாகத் தொலை நோக்கியின்றி இக்கோளை நமது கண்களால் காணலாம். இது பிரகாசத்தில் ஜுபிடரையும் சுக்கிரனையும் விட சற்று மங்கலாகத் தெரியும்.

இக்கிரகம் கதிரவனுக்குச் சேய்மையில் இருக்கும் போது 93,10,00,000 (தொண்ணூற்று மூன்று கோடியே பத்து லட்சம்) கல் தொலைவிலும், சமீபத்திலுள்ள போது 84,10,00,000 (எண்பத்து நான்குகோடியேபத்து லட்சம்) கல்தொலைவிலும் உள்ளது. இஃது எவ்வளவு தொலைவிலிருந்தாலும் நம் ஊனக்கண்களுக்குப்புலனாகும். இக்கிரகத்தின்குறுக்களவு 73,000 (எழுபத்து மூன்றுஆயிரம்) மைல்கள். இக்கோளின் மேற்பரப்பானது நமது பூமியின் மேற்பரப்பினைவிட 18 மடங்கு விரிவுடையது. இதன் பரிமாணம் (Volume) பூமியின் பரிமாணத்தை விட 734 மடங்குபெரியதாகும். சனிக்கிரகம் கதிரவனை விநாடிக்கு ஆறுமைல்வேகத்தில் தான்சுற்ற வல்லது. இவ்விதம் இது பகலவனை ஒருமுறை பரவிச் சுற்றுவதற்கு 30 ஆண்டுக்காலம் ஆகின்றது. எனவே சனிக்கிரகத்தில் ஓராண்டு என்பதுபூமியில் 30 ஆண்டுக்காலத்திற்குச்சமம். இக்கிரகம்தன்னைத் தானே ஒருமுறை சுற்றிமுடிக்க $10\frac{1}{2}$ மணி நேரம் ஆகும். நமக்குக் கதிரவனிடம் இருந்து கிடைக்கும் வெப்பத்தில் சனிக்கு நூறில்ஒரு பங்கு மட்டுமே கிடைக்கின்றது.

சனிக்கிரகத்தைப் பூமியுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இரண்டு கிரகங்களுக்குமிடையே அரியதோர் ஒற்றுமையைக் காணலாம். கதிரவனுக்கும் சனிக்குமுள்ள தூரமானது, கதிரவனுக்கும் பூமிக்கும் உள்ள தூரத்தைவிட சற்று ஏறக்குறைய ஒன்பதரை ($9\frac{1}{2}$) மடங்கு அதிகமாகும். இவ்விதமே இதன் குறுக்களவும் பூமியின் குறுக்கு அளவினை விட சற்றேறத்தாழ ஒன்பதரை ($9\frac{1}{2}$) மடங்கு அதிகமாக உள்ளது. இதன் அளவானது பூமியின் அளவைவிட 850 மடங்கு அதிகமாகும். இக்கிரத்திலுள்ள பொருள்கள்நீரைவிட இலேசானது.

நீரின் பரிமாணம் 100 என்ருல் இவற்றின் கனம் 30 எனலாம். பல வகைகளில் ஆய்ந்தால், இக்கிரகம் ஜூபிடருடனும் ஒத்திருக்கிறது. இவ்விரண்டும் மிகப்பெரியவை. இரண்டின் துருவங்களும் தட்டையானவை. இவை இரண்டும் தம்மைத் தாமே அதிவேகமாகச் சுற்றிக் கொள்பவை. இவை இரண்டிற்கும் மட்டிலுமே பல துணைக் கோள்கள் இருக்கின்றன. இவை இரண்டும் மட்டுமே வால்மீன்களை (Comets) பெற்றுள்ளன.

எக்கோளத்திலும் காணமுடியாத ஒருபுதுமை இக்கோளில் தென்படுகிறது. தொலைநோக்கியால் (Telescope) இதனைப் பார்க்கும் போது, இது தனியாக இல்லாமல் ஒருவளையத்தினுள்ளே அமைந்திருப்பதைப் பார்க்கிருேம். இவ்வளையம் வட்ட வடிவில் இல்லாமல் முட்டை வடிவாக உள்ளது. தட்டையான மூன்று வளையங்கள் இக்கிரகத்தைச் சுற்றி ஒன்றன் பின் ஒன்ருக இருப்பதாக இப்போது விஞ்ஞானிகள் உறுதிப்படுத்திக் கூறுகின்றனர். தொலைநோக்கி மூலம் பார்த்தால் முதலாக ஒளியுள்ள வளையங்கள் தென்படுகின்றன. உள் வளையமானது வெளி வளையத்தை விட அதிக பிரகாசத்துடன் திகழ்கின்றது. இவ்வுள் வளையத்தின் உள்ளே மூன்ருவது வளையம் மிகுந்த அழகுடன் காணப் பெறுகின்றது. இவற்றின் குறுக்களவு 1, 70, 000 (ஒரு லட்சத்து எழுபது ஆயிரம்) கல்தொலைவு ஆகும். இவற்றின்கனம் 50 மைல். இவை ஒவ்வொன்றிற்கும் நடுவில்மிகுந்த இடைவெளிகள்உள்ளன. சனிக்கோளுக்கும் இவ்வளையத்திற்கும் இடையே 10, 000 (பத்து ஆயிரம்) கல் தூரம் வெட்ட வெளியாக உள்ளது. சனிக்கிரகத்தினைச் சுற்றிவந்து கொண்டிருந்த ஒரு துணைக்கோளின் உடைந்த சிதைவினல் இவ் வளையங்கள் உண்டாகி இருக்கக்கூடும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ரோச் எல்லை (Roche Limit) என்ற வான சாத்திர நியதிப்படி, ஒரு பெரிய கோளினை ஒரு துணைக்கோள் 50, 000 கல் தொலைவைக் கடந்து உள்ளே நெருங்கி வந்தால் சிறிய கோள் சிதறுண்டு நொறுங்கிவிடும். பெரிய கோளின் ஈர்ப்பு சக்தியால் சிதைவுண்ட சிறியகோளின்சிதைவுகள் அதனைச்சுற்றிவரவும்கூடும். இங்ஙனம் சிதைவுண்ட ஒரு துணைக்கோளின் துகள்களே இவ்விதமாகச் சனிக்கிரகத்தினை மூன்று வளையங்களாகச் சுற்றி வரக்கூடும் என வான சாத்திர அறிஞர்கள் எண்ணுகின்றனர்.

சனிக்கிரகத்தினுக்கும் ஜூபிடரினை (வியாழனைப்) போல் ஒன்பது துணைக்கோள்கள் உள்ளன என்பது விஞ்ஞானிகளின் துணிபு. இத்துணைக் கோள்களுள் மிகப்பெரியது டைட்டன் (Titan) என்பது. இதன் விட்டம் 2, 600 மைல்; நமது சந்திரனை விடப்பெரியதுஇது. பரிமாணத்தில் டைட்டனுக்கு அடுத்தபடியாக இருப்பவை ரீயா (Rhea), ஐயாபெடஸ் (Iapetus) என்பவை.

இவை இரண்டும் நமது நிலவில் பாதி அளவே உள்ளன. இவை இரண்டினையும் அடுத்துள்ளது டெதெஸ் (Tethys), டையோன் (Dione) என்பவை ஆகும். இவற்றின் சராசரி குறுக்கு அளவு 800 மைல். என்ஸிலாடஸ் (Enceladus), மீமாஸ் (Mimas), ஹைபிரியான் (Hyperion), ஃபோப் (Phobe) ஆகியன ஏனைய துணைக் கிரகங்கள். இவற்றின் விட்டங்களின் அளவு முறையே 500, 400, 300, 150 மைல்களாகும். இவற்றுள் எட்டுத் துணைக்கோள்கள் சனிக்கிரகத்தை ஒருமுகமாகவும், ஃபோன் என்ற ஒன்று மட்டிலும் எதிர்முகமாகவும் சுற்றி வருகின்றன.

கதிரவன் குடும்பத்திலே சனிக்கிரகம் விசித்திரமான அமைப்பைக் கொண்டது. என்னே இறைவன் படைப்பின் விநோதம்!

— தொகுத்தளித்தவர் - சுவாமி வீரபாகு.

ஆதாரம் :-

The Captives of the Sun
By James S. Pickering, Newyork.
A Short History of The Universe
By Arther S. Gregor (1964) Newyork.

வெளிவந்துவிட்டது !

சித்தாந்த சைவ வினு விடை

(நான்காம் பதிப்பு)

ஆசிரியர் :- திரு. கு. திருஞானசம்பந்தசாமி பிள்ளை
திரிசிரபுரம்.

★ இந்நூல் சைவ சித்தாந்தம்பற்றி 574 வினு விடை மூலம் விரிவான விளக்கம் தருகிறது.

★ நான்கு முறை இந்நூல் பதிப்பிக்கப்பட்டதே இந்நூலின் சிறப்புக்கு நற்சான்று ஆகும்.

★ உலகியல், சித்தியல், வேத சிவாகம வியல், பதியியல், சக்தியியல், சிவகுமாரவியல், பாசவியல், மூர்த்தியியல், ஸ்தலவியல், தீர்த்தவியல், ஆசாரியவியல், முத்தியியல் எனப் பன்னிரு தலைப்புக்களில் சித்தாந்த சாத்திரம் இந்நூலில் பயனுறுமுறையில் ஆய்வுசெய்யப்படுகிறது.
பக்கங்கள் 186. அடக்க விலை ரூ. 8/–

ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுரம், மயிலாடுதுறை 609 001.

திருஞானசம்பந்தர் - - குருவருட் சிந்தனை

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ., பி. எட்.,

[தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் 2—6—85 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

தருமை விழாக்கோலத்துடன் - தெய்விகப் பொலிவோடு இருந்தது! ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில் திருவிழா .... ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜைப் பெருவிழா! திருக்கோயிலை ஒட்டி மிகப் பெரிய பந்தல் போடப்பட்டிருந்தது.

தமிழகத்துத் தலைசிறந்த அறிஞர்கள் குருபூஜை விழாவில் கலந்துகொண்டார்கள். நாள்தோறும் பஞ்சமூர்த்திகளின் திருவீதி உலா......பண்ணிசை முழக்கம்......வேதபாராயணம்.....நாதசுவரக் கலைஞர்களின் இன்னிசை! சிறப்பான வழிபாடுகள்!

அன்று, முதல் ஞாயிறும் நான்காம் திருநாளும் ஒன்றின. மிகுந்த பணிகட்கிடையேயும் குருமணிகள் சரியாகப் பத்து மணிக்குச் சித்ராசனத்தில் அமர்ந்து அன்பர்கட்குத் திருநீறு வழங்கினார்கள். கூட்டுப்பிரார்த்தனை . ...அடுத்துக் குருமணிகளின் அருளுபதேசம்.

அன்று திருஞானசம்பந்தர் புராணச் சிந்தனை; அன்றைய அருளுபதேசம் பொதுவான சமயச் சிந்தனையாக - புராணத்தின் முன்னுரையாக - அன்பர்கள் அறியவேண்டிய அரிய கருத்துக் குவியல்களாக அமைந்தது.

ஞானசம்பந்தர் மூவர்; முதலாமவர் திருஞானசம்பந்தர்; அடுத்தவர் மறைஞானசம்பந்தர்; அடுத்தவர் தருமையாதீனத்தை நிறுவியருளிய ஸ்ரீ குருஞானசம்பந்தர். ஔவையார் பலர், நக்கீரர் பலர், - இவர்கள்போலவே ஞானசம்பந்தர் மூவர் - ஆனால் இவர்க்கட்கு அமைந்துள்ள அடைமொழி-பொருள்பொதிந்த அடைமொழி- அவர்கள் வாழ்ந்த காலத்தினைச் சந்தேகத்துக்கு இடமின்றி அறியவும் அவர்களின் தனிச் சிறப்பை அறியவும் உதவுகின்றது - குருமணிகள் மேலும் விளக்கம் அருளினார்கள்.

எண்ணரிய சிவஞானத்து இன்னமுதம் குழைத்தூட்டப்பெற்ற மையால் முதலாமவர் ' திரு ' ஞானசம்பந்தர் எனப்பெற்ருர். சாம வேதம் கற்று வல்லவரானமையால் சந்தான குரவருள் மூன்ருமவர் ஆகிய ஞானசம்பந்தர் ' மறை ' ஞானசம்பந்தர் ஆனர். குருவாக எழுந்தருளி ஓடிவரும் காரணர்க்கு உண்மை வைத்தருளிய பான்மையால் ' குரு ' ஞானசம்பந்தர் எனத் தருமையாதீனக் குரு முதல்வர் திருப்பெயர் நிலைபெறுவதாயிற்று.

ஞானசம்பந்தர் என்ற பெயரையும் ' திரு ' என்ற அடைமொழி யையும் தத்துவ நோக்கோடு உபதேசித்தார்கள். திரு - என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மைநோக்கம்; சிவஞானம் பெற்ற மையால் ஞானசம்பந்தர் ஆயினர்.

'' சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில் ''

என்பது சேக்கிழார் வாக்கு.

இப்பாடலை அன்பர்கள் மயக்கமற உணரும் பொருட்டுப் பொருள் சிறக்க உணர்த்தினர்கள். திருப்பெருகு சிவஞானமாகிய உவமையிலாக் கலைஞானத்தையும் பாங்கினில் ஓங்கிய ஞானமாகிய உணர்வரிய மெய்ஞ்ஞானத்தையும் சம்பந்தர் தாமுணர்ந்தார் என விளக்கம் தந்தமை சிறப்பாக இருந்தது. சிவனடி சிந்திக்க உதவு வது கலைஞானம், உலகியலை ஒட்டிய இது உவமையில்லாதது. பிறப்பை அறுப்பது மெய்ஞ்ஞானம். இது உலகியலுக்கு அப்பாற் பட்டது. எனவே உணர்வரியது எனக் கூறப்பட்டுள்ளது. பரம் பொருளை அறியத் துணைசெய்வது கலைஞானம்; பிறவியை அறுக்கத் துணை செய்வது மெய்ஞ்ஞானம். இக்கருத்துக்களை உள்ளடக்கியே இறைவனைத் ' தீராநோய் தீர்த்தருள வல்லான் ' - ' வாராத செல்வம் (முத்தி) வருவிப்பான் ' எனத் துதித்தனர். அடுத்து,

'' பல்லூழிக் காலம் பயின்றரனை அர்ச்சிக்கில்
நல்லறிவு சற்றே நகும் ''

என்னும் சைவசமய நெறிக் குறளை மேற்கோள் காட்டி ''உயிர்கள் படிப்படியாக ஞானநிலைக்கு வரவேண்டும்; இறைவன் உயிர்களின் தகுதிக்கேற்ப ஞானம் வழங்குவான்; உழைப்பின் மூலமே அறிவு வளரும்; உன்னத நிலை அடையமுடியும்'' - எனக்கருத்து விளக்கம் செய்தருளியமை மனத்திற்கு இனிமையாய் இருந்தது.

இறைவன் குருவாகி எழுந்தருளியிருந்து அருள் வழங்கும் தன்மையைப்புலப்படுத்தி ஆதீனமுதற்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் சீர்பரவினர்கள். குருவடிவாகிக் குவலயம் வந்தவர்கள் அருளாளர்

கள்; அவர்கள் உயிர்களின்பக்குவத்திற்கு ஏற்ப உபதேசம் செய்தருளுவர் என்பதைவிவரித்தார்கள். இறைவன் பக்குவமுடையார்க்கே தகுதி அளிப்பன் என்னும் கருத்தை அற்புதமாக அருளினார்கள்.

பார்வதி திருமணம்! இறைவன் பெருமணத்தைத் தரிசிக்க எல்லாரும் இமயம் சென்றனர்; வடக்குத் தாழ்ந்தது! தெற்கு உயர்ந்தது; பெருமான் குறுமுனியின் (அகத்தியரின்) தகுதியை எண்ணித் தென்திசைப் பொதியமலைக்கு அனுப்பினார். பொதிய மலையில் திருமணக்காட்சியும் நல்கினார். இந்நிகழ்ச்சி போலவே குருஞானசம்பந்தரைக் கமலை ஞானப்பிரகாசர் தருமைக்கு அனுப்பினார் என ஒப்பிட்டமை புதிய இனிய சிந்தனையாக அமைந்து மகிழ்வித்தது.

பெரியவர்களுடன், உடன் இருப்பது பெரிய அனுபவத்தை உண்டாக்கும். குருநாதரைப் பிரிந்து தனித்து இருக்க விரும்பாத குருஞானசம்பந்தர் வருந்தினார்; குருவாணை கடக்கவும் மனம்விரும்பவில்லை. ''கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை கண்டதுண்டோ'' எனக்கருதிப்பார்த்துத் தருமை அடைந்தார். ஆயினும் அருளாணையின் வண்ணமே குருவாரந்தோறும் தம் குருவாகிய ஞானப்பிரகாசரைத் திருவாரூர் சென்று தரிசித்தார்.

இங்ஙனம் குருபக்தி மேலோங்கிய நிலையில் குருமுதல்வர் தம் பெருமைகளை விளக்கிய குருமணிகள் குருபூஜை பற்றி ஓர் ஆய்வுக் கருத்தையும் வெளியிட்டார்கள். தருமையாதீனக் குருமுதல்வர் குருபூஜை வைகாசி - தேய்பிறை சஷ்டி திதி அன்று நிகழ்கிறது. இது ஞானப்பிரகாசர் திதியாகலாம் என்பது அது.

'குருபூஜை குருமுதல்வருக்கு, மட்டும் அல்ல, ஆசாரியர்கள் அனைவருக்கும்தான்' - என்றதத்துவச் சிந்தனையை முன்வைத்தார்கள்.

காரைக்கால் அம்மையார் முதல்குரு அவர்நமக்குப்பாரம்பர்ய பண்பாட்டை - நன்னெறியைக் காட்டினார். பெருமான் உறையும் கயிலையைக் காலால் மிதிக்கக் கூடாது எனத்தலையால் நடந்து கடந்தார். இதையெல்லாம் கூர்ந்து நோக்கும்போது, சம்பிரதாயம் கலையுணர்வு கொண்டு செயல்கள் அமையவேண்டும், உயர்ந்தவர் வகுத்த நெறியில் உலகைச் செலுத்தவேண்டும்- உலகம்என்பது உயர்ந்தோர் மாட்டே - இங்ஙனம் அருளாளர் காட்டிய வழிகளை அனைவரும் உணருமாறு அற்புதமாக உபதேசித்தார்கள்.

குருவருளைப்பற்றி வரலாற்றின்மூலம் விளக்கினார்கள். அர்த்த ஜாமபூசை முடித்து கமலைஞானப்பிரகாசர் மனைக்குத் திரும்புகிறார்! குருஞானசம்பந்தர் கைவிளக்கு ஏந்திமுன்னே செல்கிறார். இல்லம் அடைந்த குருநாதர் 'நிற்க' எனப்பணித்தார்; சீடராம் சம்பந்தர்

நின்றார். பெருமழை பெய்தது; கையில் விளக்குடன் சீடர்நிற்கிறார்; மழை அவரைமட்டும் தீண்டாது சுற்றிலும் பெய்தது. ‘ நிற்க ’ – என்ற குருவாணை ஞானநிலை கைவரப்பெற்ற நிலையில் ‘ நில் ’ – என்று கேட்டதாகக் கொள்ளவேண்டும். தியானநிலையில் நின்றார்! மழையும் அவரிடம் யாதொன்றும் செய்யவில்லை. மறுநாட்காலை [illegible] மூலம் உணர்ந்த ஞானப்பிரகாசர், சீடராம் ஞானசம்பந்தரை வில்வாரண்யம்(தருமபுரம்) சென்று பக்குவர்க்கு உபதேசிக்கப்பணித்தார்.

இங்ஙனம்இடையிடையே பொருள்தொடர்போடு குருமுதல்வர் பற்றிய பற்பல சிந்தனைகளை உபதேசித்து அன்பர்களை நெறிப்படுத்தினார்கள்.

குருபூஜைநாளில் தருமையில் முந்தைய குருமூர்த்தங்களைக் குருமணிகள் வழிபடுதலைக்குறிப்பிட்டு ஞானப்பிரகாசர் குருபூஜை முதல்நாளாகவும் குருஞானசம்பந்தர் அடுத்த நாளாகவும் வழிபாடு செய்வதைக் குறித்தார்கள். அத்வைதத்தில் வேத வியாசரை முன்னால்வைத்து அடுத்துசுகர் முதலானபரம்பரையினரைப் பூசிப்பர் என ஒப்பிட்டார்கள்.

ஆசாரிய வழிபாட்டின் பயனைத் “ தன்னை அறிவித்துத் தான் தானாச் செய்தானைப் பின்னை மறத்தல் பிழையலது ” என்னும் சிவஞானபோத வெண்பாவை மேற்கோள் காட்டி விளக்கினார்கள். சுந்தரர் ‘ஆரூரானை மறக்கலுமாமே’ என நன்றியுணர்வுதோன்றப் பாடினார். நம் முன்னோர் கூறிய நெறியில் இறைவனையும் உலகில் மானிடச் சட்டை தாங்கிவந்த ஆசாரியனையும் நன்றியுணர்வோடு எண்ணி உருகி வழிபடவேண்டும்.

இங்ஙனம் பல தத்துவங்களை அருளி, திருத்தொண்டர் புராண நெறியில் ஞானசம்பந்தர் புராணத் தொடக்கம் பற்றிய ஒரு சிந்தனையைப் புதிய நோக்கில் அருளினார்கள். “ திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டின் நெறி ” என்றுசேக்கிழார் திருநாவுக்கரசர் புராணம் தொடங்கினார். ஆனால் ஞானசம்பந்தர் புராணத்தை ‘ வேத நெறி ’ என்று தொடங்குகின்றார்.

வேதநெறி – நால் நெறியை விளக்குவது. சரியை, கிரியை, யோக, ஞானமார்க்கங்களை உணர்த்துவது. உடல் வாயிலாகக் – கன்மேந்திரங்களின் வாயிலாகச் செயற்படுவது கிரியை. அந்தக் கரணங்களின் வாயிலாக இயற்றுவது யோகம். இவை அனைத்தையும் அர்ப்பணிப்பது ஞானம். ‘ முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள் ’ எனத்தொடங்கும் திருநாவுக்கரசர் தேவாரம் இக்கருத்துக்களை உள்ளடக்கியது.

மேலும் உபநிடதம், வேதாந்தம் பற்றிய பல குறிப்புக்களை அருளினார்கள். வேதத்தில் ஞானகாண்டம் என்பது சமயச்சிந்தனை,

கடவுட் கொள்கை கூறுவது எனவும் கருமகாண்டம் செயல் முறை பற்றியது எனவும் அருளித் தாருகாவனத்து முனிவர்கள் கரும காண்ட நெறியைப் பின்பற்றினர் எனக்குறித்தார்கள். குருவை வழிபடல், திருக்கோயில் வழிபாடு முதலியவற்றைப் பலமேற் கோள்கள்மூலம் வலியுறுத்தினர்கள். உலகியல் ஓங்க சைவத்துறை விளங்க, பூதபரம்பரைப் பொலிய அவதரித்த ஞானப்பிள்ளையார் வரலாற்று முதல் பகுதியைச் சுட்டினர்கள்.

ஞானசம்பந்தரின் தாயார் பகவதியம்மையார், தந்தையார் சிவபாத இருதயர் -இவ்விருவரும் அந்தணர்கள். சைவநெறி வந்த சிரேஷ்டர்கள் என்பதை ''மரபிரண்டும் சைவநெறி வழி வந்த கேண்மையினர்'' என்னும் பெரிய புராணத் தொடர் கொண்டு விளக்கினர்கள்.

ஞானசம்பந்தர் முதலிய ஆசாரியப் பெருமக்களை வழிபடுதலே நாமுய்யும் நெறி என்பதை முன்னுரையாக அமைத்தருளினர்கள். தம் குருநாதரின் சிந்தனையில் மூழ்கி அவர்களைத் தியானித்தவாறே பெருமைகளை உபதேசித்து அருளினர்கள். அன்று குருவருளே உபதேசம்!

மணி ஒன்ருயிற்று. உபதேசம் நிறைந்தது. கோடைக்கேற்பக் கனிச்சாறு குளிர்ச்சியாகக் கிடைத்தது. பருகினேம்; மகிழ்வோடு இல்லம் ஏகினேம்!

குருவருளே சிந்திக்கும் சற்குருவின் தாள்போற்றி!

பெருமையினும், எளிமையானது வேருென்றுமில்லை - உண்மையில் எளிமையாக இருத்தலே பெருமைக்கு உரியது,

— எமர்ஸன்.

ஒரு குழந்தையின் எதிர்காலத் தலைவிதி, அக்குழந்தையைப் பெற்றெடுத்த தாயின் செயலிலேதான் எப்பொழும் அமைந்து உள்ளது.

— நெப்போலியன்.

ஓர் உயர்தர மனிதனின் மார்க்கம் மூன்று வகையில் உள்ளது. சீலம் உள்ளவனுகச் சிறந்து இருத்தல் - இதனுல் அவன் பதைப் பற்ற வாழ்க்கையைப் பெறுவான். ஞானம் உள்ளவனுக ஞாலத்தில் திகழ்தல் - இதனுல் அவன் கவலைகள் அற்ற முறையில் காலம் தள்ளுவான். தைரியம் மிக்கவனுகத் திரிதல் இதனுல் அவன் பயம் அற்ற வாழ்க்கையைப் பெற்றவனுவான்.

— கன்பியூஷியஸ்.

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத்திருநாளில் திங்கள்தோறும் தேவாரப் பாடல் பெற்றதலங்களில் சிறப்புவழிபாடுகள் நிகழ்ந்துவருகின்றன, ஆனித்திங்கள் 8ஆம் நாள் 22—6—85 சனிக்கிழமையன்று திருப் புறவார் பனங்காட்டூர் (பனையபுரம்) அருள்மிகு பனங்காடீசுவரர் ஆலயத்தில் சிறப்புவழிபாடு நிகழ்வுற்றது. விசேஷ அபிஷேக ஆராதனைகளும் திருப்பதிகப் பாராயணமும் நிகழ்த்தப்பெற்றன. 'திருப்புறவார் பனங்காட்டூர்த்திருப்பதிகம்' என்றநூல்வெளியிடப் பெற்றது. தருமையாதீனத் தமிழ்ப் புலவர் வித்துவான் திரு. வி. சா. குருசாமிதேசிகர், எம். ஏ. உரையாற்றினர். அன்பர் பலர் வழி பாட்டிற் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமையாதீனத் திருமடத்தில் ஒவ்வொரு ஆங்கிலமாத முதல் ஞாயிறன்றும் காலைசரியாகப் பத்துமணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நி தானத்தை அன்பர்கள் வணங்கி வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனை - வழிபாட்டுக் கூட்டம்நிகழ்ந்து வருகிறது. 7—7—85 அன்று 49ஆம் அருளுபதேசம் நிகழ்வுற்றது.

முதலில் குருவழிபாடும் பிரார்த்தனையும் நிகழ்ந்தன. அடுத்துத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருத்தொண்டர் புராணச் சிந்தனையாக ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள் புராணப் பகுதியை உபதேசித் தருளினர்கள்.

ஞானசம்பந்தர் புராணத்தின்முதல் பகுதியாகத் திருவவதாரம், ஞானப்பால் உண்டமைபற்றி வரலாற்றைத் தத்துவச் சிந்தனை பொலிய விளக்கினர்கள். ஸ்ரீ திருஞானசம்பந்தர் அழுதருளிய காட்சியைச் சைவசித்தாந்த நன்னெறிகொண்டு விளக்கினர்கள். 'கண்மலர்கள் நீர்ததும்பக் கைம்மலர்களாற் பிசைந்து, வண்ண மலர்ச் செங்கனிவாய் மணிஅதரம் புடைதுடிப்ப' அழுதருளியமை யைக்கொண்டு நயனதீட்சை, பரிசதீட்சை, வாசிகதீட்சை என்னும்

தீட்சை நெறிகளை இயைத்து உணர்த்தினார்கள். 'பைங்குவளைக் கார்மலரால்' எனும் திருவெம்பாவைப் பாடலை ஒப்பிட்டு உபதேசித்துச் சித்தாந்தச் செந்நெறியைப் புலப்படுத்தி இனிது விளங்கும் வண்ணம் உபதேசித்தார்கள். திருமுறைகள், புராணங்கள் வாயிலாகவும் உலகியல் எடுத்துக்காட்டுக்கள் வாயிலாகவும் அரியகருத்துக்களை எளியமுறையில்உபதேசித்தமை அன்பர்கட்குப் பெருவிருந்தாய் அமைந்தது. அன்பர்கள்பலர் கலந்துகொண்டு பயனுற்றனர்.

அடுத்து 4—8—85 அன்று 50ஆம் அருளுபதேசக் கூட்டம் நிகழ்வுறும். அன்பர்கள் கலந்துகொண்டு பயன்பெறுக.

திருத்தல வழிபாடுகள்

மக்கள் ஆன்மநலம் பெற்றுச்சிறக்கவேண்டித் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருத்தலங்களுக்கு எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்கு ஆசிவழங்கியமை பற்றிய செய்திச் சுருக்கம் பின்வருமாறு :—

1. 12—6—85 புதன்கிழமை வாணதிரையன் பட்டினம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மகாகும்பாபிஷேக விழாவினையொட்டி நடைபெற்ற யாகசாலை வழிபாட்டிற்கு எழுந்தருளி அருளாசி வழங்கினார்கள்.

2. ஈரோடு திருநடைத் திருப்பயணக் குழுவினரின் பாதயாத்திரை நிறைவினையொட்டி, சீகாழி ஸ்ரீ திருஞானசம்பந்தர் சந்நிதியில் 21—6—'85 வெள்ளிக்கிழமை நடைபெற்ற விழாவில் அருளாசி வழங்கினார்கள்.

3. 24—6—85 திங்கட்கிழமை அன்று திருக்கோலக்கா ஓசைகொடுத்த நாயகி உடனாகிய திருத்தாளமுடையார் திருக்கோயில் மகாகும்பாபிஷேக விழாவினையொட்டி யாகசாலைவழிபாட்டுத் துவக்கவிழாவிற் கலந்துகொண்டு அருளாசி வழங்கினார்கள்.

4. 25—6—85 செவ்வாயன்று கன்னியாக்குடி ஸ்ரீ கயிலாயநாதர் திருக்கோயில் மகாகும்பாபிஷேக யாகசாலை விழாவிற் கலந்துகொண்டு வழிபாடாற்றி அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கினார்கள்.

5. 26—6—85 புதன்கிழமை திருவாரூர் திருநீலகண்டேஸ்வரம் திருநீலகண்டேசுவரர் திருக்கோயில் கும்பாபிஷேக விழாவினையொட்டி யாகசாலை வழிபாடாற்றி - அஷ்டபந்தனம் சாத்தி அருளாசி வழங்கினார்கள்.

6. அன்றே குடவாயில் கோணேசுவரசுவாமி திருக்கோயிலில் யாகசாலை வழிபாடாற்றி அஷ்டபந்தனம் சாத்தி, அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கினூர்கள்.

7. 27—6—85 வியாழனன்று மேலைக்கஞ்சன் கொல்லை ஸ்ரீ சித்திவிநாயகர் திருக்கோயிலில் வழிபாடாற்றிக் கீழ்க்கஞ்சன் கொல்லை ஸ்ரீ மகாமாரியம்மன் கோயில் கும்பாபிஷேக தரிசனம் செய்து அன்பர்கட்குப் பிரசாதம் வழங்கினூர்கள்.

8. 30—6—85 ஞாயிறன்று திருநீடூர் ஸ்ரீ சோமநாதசுவாமி திருக்கோயில் வழிபாடாற்றிக் கும்பாபிஷேக விழாத் திருப்பணித் தொடர்பாகக் குழுவினர்க்கு ஆலோசனை வழங்கியருளினூர்கள்.

9. 3—7—85 புதன்கிழமை அன்று திருநீடூர் ஸ்ரீ சோமநாத சுவாமி திருக்கோயிலுக்கு எழுந்தருளி அஷ்டபந்தனமருந்துசாத்தி, யாகசாலை வழிபாடு ஆற்றினூர்கள்.

10. 4—7—85 வியாழனன்று திருநீடூர் ஸ்ரீ சோமநாதசுவாமி திருக்கோயில் கும்பாபிஷேகத்திற் கலந்து கொண்டு முன்னின்று நிகழ்த்தினூர்கள். கும்பாபிஷேகம் நிறைவுற்றபின், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருவுளம் பற்றிய வண்ணம் சுவாமிக்கு, கடபூஜை செய்து ஆராதித்து மகா அபிஷேகம் செய்வித்து, பரிவட்டம் அணிவித்துச் சிறப்பு வழிபாடுகள் செய்வித்தார்கள், விழாவிற் கலந்துகொண்ட அன்பர்கட்குப் பிரசாதம் வழங்கி அருளினூர்கள்.

வேளூரில் சம்வத்சராபிஷேகம்

சிவாலயங்கட்குக் குடமுழுக்கு நடைபெற்ற திருநாளை அடுத்து வரும் ஆண்டுகளில் அபிஷேகஆராதனைகளுடன் கொண்டாடுவதை சம்வத்சராபிஷேகம் என்பர். தருமையாதீனத்திற்குச் சொந்தமான வைத்தீசுவரன் கோயில் என வழங்கும் திருப்புள்ளிருக்கு வேளூர்த் திருக்கோயிலில் சௌமிய ஆண்டு ஆனித் திருவோண நாளில் (2—7—69) குடமுழுக்கு விழா நிகழ்வுற்றது. இதன் நினைவாகக் குரோதன ஆண்டு ஆனித் திருவோணநாளில் 5—7—85 (வெள்ளிக்கிழமை) சம்வத்சராபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. வேத பாராயணம், திருமுறைப்பாராயணம் ஏகாதசருத்ரஜபம் முதலியவற்றுடன் அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன. அன்பர்கள் பலர் தரிசித்துப் பயன் பெற்றனர்.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(குரோதனஹு ஆடிமீ 1௳ முதல் 31௳ முடிய)

(16—7—1985 முதல் 16—8—1985 முடிய)

குரோதனஹு ஆடிமீ 1௳ மங்களவாரம் திருவாதிரை நக்ஷத்திரம் பத்திரைகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 26 நாழிகை 28 விநாடிக்கு, தனுர்லக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரியபகவான் மிதுனராசியிலிருந்து கடகராசி சங்கிரமணமாக ஆடி மாதப் பிரவேசம் செய்தருளுகின்றார். அன்று தட்சிணாய புண்ணிய காலம் ஸஸ்யாதிபதி செவ்வாய்பகவான் ஆகிறார். இதனால் உலகில் எங்கும் செம்மண் பூமியில் வளம் உண்டாகும். செந்நெல், புதிய வகை நெல், துவரை முதலிய பயிர்கள் அபிவிருத்தியடையும். தேசங்களில் ஆளுநர்கள் மனுநீதியில் ஆட்சி புரிந்து பிரஜா நலம் காப்பர். லோகபிரஜைகள் வாழ்க்கை வசதிகள் பலவும் அடைந்து சுபிட்ச வாழ்க்கை நடத்துவர்.

1. மேஷம் :- அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் நற்பலன் தரும். நல்ல பணவருமானம் வரும். வெளுமையான வஸ்துவின் பிராப்தி ஆபரண பிராப்தியை யளிக்கும். கல்வி கலைகளில் ஒப்பந்தங்களில் நல்லன ஏற்படும். வாகனசுகம்திருப்தியளிக்கும். புத்திரர்களின் கல்வி கலை உத்தியோகங்களில் முன்னேற்றமும் உயர் அந்தஸ்தும் அளிக்கும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். எல்லாக் காரியங்களும் வெற்றியாக நடந்து வரும். ஜுலை 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீரிஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பண வருமானம் கணிசமாக வரும். நல்ல ஆபரணந்தரும். வீடுவாகனபிராப்தியில் நல்ல சௌகரியம் தரும். வித்தியாவியாபாராதிகளில் கலைத்துறை

யில் அரசாங்க நன்மையை ஏற்படுத்தும். முயற்சித்த எல்லாக் காரியங்களும் நன்முறையில் நடக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருகஇருந்துவரும். ஜுலை 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

3. மிதுனம் :– மிருகசீரிஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். பண வருமானம் கண்யத்திற்கு ஏற்ப வந்து கொண்டிருக்கும். குடும்ப சம்பிரதாயங்களில் ஸ்திரி வழி கௌரவத்தில் செலவும் ஆகும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்தி வரும். வீடு கால்நடை வாகனப்பிராப்திகளில் சௌகரியம் தரும். எல்லாக்காரியங்களும் இஷ்டசித்தியாக நடந்து கொண்டிருக்கும். ஜுலை 31, ஆகஸ்டு 1 இத்தேதிகள் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபம்.

4. கடகம் :– புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். பண வருமானம் கெடியான தோரணைக்கு ஏற்பவரவாகிக் கொண்டிருக்கும். கௌரவம் மிகுந்த நல்ல காரிய செலவும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். வித்வத்துவம் கலைத்துறைகளில் புகழ்தரும். பூமி இயந்திர சாதனங்களில் அபிவிருத்தி ஏற்படும். தாம்பத்தியவாழ்க்கை தெய்வ பக்தியில் தான தர்மங்களுடன் நடக்கும். ஆகஸ்டு 2, 3 தேதி சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

5. சிம்மம் :– மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சரபலனுக நடக்கும். பண வருமானம் வந்து கொண்டிருக்கும். மிகஅவசிய செலவினங்களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். வித்தியா வியாபாராதிகளில் கலைத் துறையில் விளம்பரமும், முதலீடும் ஆகும். வீடு வாகனபிராப்தியில் நல்ல சௌகரியம் தரும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்து வரும். ஆகஸ்டு 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

6. கன்னி :– உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் சுப பலனுக நடக்கும். பண வருமானம் மூன்று வகையில் வந்துசேரும். வித்தியா வியாபாராதி கலைத்துறையில் விசேஷப்பலனை உண்டுபண்ணும். ஸ்திரி தன பிராப்தியையளிக்கும். வீடு வாகனங்களில் நல்ல சௌகரியம் புத்திரர்களுக்கு அரசாங்க நன்மையை ஏற்படுத்தும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியில் தானதருமங்களுடன் நடந்து வரும். ஆகஸ்டு 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் கணிசமாகவரும். வித்தியா வியாபராதிகளில் கலைத் துறையில் விசேஷ பலன் தரும். பூர்வசொத்துபிராப்தியில் நல்ல ஏற்பாடு நடக்கும். எல்லாக்காரியங்களும் ஜெயமாக நடந்தேறும். ஜுலை 29 உ அளவில் அரசாங்கநன்மை ஏற்படச்செய்யும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். ஆகஸ்டு 10, 11 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரபலஞக நடக்கும். பண வருமானம் நல்ல விதத்தில் வந்து கொண்டிருக்கும். பூமி இயந்தி ரங்களில் விருத்தி ஏற்படும். ஸ்திரிமூலம் நன்மைகள் ஏற்படச் செய்யும். விடுவாகனங்களில் ஸ்திரசொத்தில் முதலீடு ஆகும். எல்லாக்காரியங்களும் வெற்றியாக நடக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். ஜுலை 16, 17 ஆகஸ்டு 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம். வியழான், வெள்ளி சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9 பாதங்களும் மிச்சிரப் பலஞக நடக்கும். பண வருமானம் பெருமதிப்பில் வரவாகிக் கொண்டிருக்கும். வித்வத் துவம் கலைத்துறைகளில் முன்னேற்ற ஸ்திதியும் அரசாங்க நன்மை களும் ஏற்படும். ஜுலை 27 தேதிக்கு மேல் புதியவாகன பிராப்தியை யளிக்கும். எல்லாக் காரியங்களையும், மிகத்துரிதமாக நடத்திவரும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்து வரும். ஜுலை 18, 19 ஆகஸ்டு 14, 15 தேதிகளில் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரப்பலஞக நடக்கும். பணவருமா னங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்திவரும். இயந்திரசாதனம் ஒன்று வாங்குதல் ஆகும். சகோதரருக்கு அரசாங்கத்தில் நல்லன ஏற்பட்டு வரும். புத்திரர்களுக்கு உயர்வு தரும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியில் தானதருமங்களுடன் நடந்து வரும். எல்லாக்காரியங்களையும் நிதானபோக்கில் நடத்தி வரும். ஜுலை 20 21 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்பராசி 9 பாதங்களும் சுப பலஞக நடக்கும். பணவருமானங் களில் நல்லஸ்திதியை ஏற்படுத்தும். பொதுநலதர்மம் தெய்வகைங்

(தொடர்ச்சி 670 ஆம் பக்கம் பார்க்க)

நெல்லி

நெல்லி தென்னிந்தியாவில் ஏராளமாக வளரும் மரமாகும். இதை ஆங்கிலத்தில் '' இண்டியன் கூஸ்பெரி '' (Indian goose-berry) என்றும் சமஸ்கிருதத்தில் '' ஆமலகி '' என்றும் கூறுவர். நெல்லி, குறிப்பாக மலைநாடுகளில் உண்டாகும். நெல்லி மர வகையில் கருநெல்லி என்றும் அருநெல்லி என்றும் வேறிரு வகை நெல்லியும் உண்டு. நெல்லியின் இலை, பூ, பட்டை, வேர், காய், விதை ஆகியவை பயனுடையன.

நெல்லிக் காயைப் பகற்போது உண்டால் வெறி, ஐயநோய், பீநசம், வாய்நீர்ச் சுரப்பு, வாந்தி, மயக்கம், தலைச்சுற்றுதல், மல பந்தனம், பிரமேகம் ஆகிய நோய்கள் தீரும். இதை அருந்தி வருபவருக்குச் காமன் போன்ற அழகுண்டாகும் என மருத்துவ நூலார் மதித்துக் கூறுவர்.

நெல்லிமரத்தின் வேர், விரை, பட்டை, ஈர்க்கு, காய், கனி, வற்றல் இவைகளைக் கற்பமுறைப்படி ஊறுகாய், துவையல், குடிநீர் செய்து தக்க பத்தியத்துடன் உபயோகித்தால் பல்லை, மகோதரம், சூலைவலி, மேகஉஷ்ணம், பாண்டு, பெருவயிறு, மூலம், பெரும்பாடு, சோபை, மூர்ச்சை, வாயு, தனுர்வாயு முதலிய பிணிகள் தீரும். நாவுக்குச் சுவையைத்தருகின்ற நெல்லிமுள்ளியால் உடற்சூடு, எலும்புருக்கிநோய், குருதியழல் முதலிய நோய்கள்விலகும். நெல்லி முள்ளியை அரைத்துத் தலை முழுகக் கண்ணுக்கு மிகவும் நல்லது.

நல்லநெல்லி முள்ளியது நாக்குக் குருசிதரும்
அல்லல்விரி பித்தம் அகற்றுமதை — மெல்லத்
தலைமுழுகக் கண்குளிரும் தாவுபித்த வாந்தி
இலைமிதிமே கங்களும் போம் எண். (தேரன் குணபாடம்)

கருநெல்லி கிடைப்பது அரிது. அதிகமான் ஒளவைப்பாட்டிக்கு இக்கனியை அளித்ததாக இலக்கியம் பேசும். இது முப்பிணி வகைகள் யாவற்றையும் போக்கும். உடலை அழியாமல் காயகல்பம் போல் காப்பாற்றும். இதனால் மன அமைதியும் ஆனந்தமும் உண்டாகும் என்பர்.

நெல்லிக்காயைக் துவையல் செய்து சாப்பிட, சுவையின்மை, வாந்தி இவைகளைப்போக்கும். நெல்லி வற்றலைக் குடிநீர் செய்து கொடுக்க, மயக்கம், தாகம், ஒக்காளம் - இவைநீங்கும்.

இலைக் கொழுந்தை அரைத்து மோரில் கலந்து சீதக் கழிச்சலுக்குக் கொடுக்கலாம். நெல்லி வற்றலைக் குடிநீர் செய்து சீனி கூட்டிப் பால் சேர்த்துச் சாப்பிட, சூடு, ஆண்குறிப்புண், வாந்தி முதலியன தீரும்.

நெல்லிக்காய் இலேகியம்:

60 பலம் நெல்லிவற்றலை 32 படி தண்ணீரில்போட்டு. எட்டு ஒன்றாய் வற்றவைத்து வடித்து இறுத்திடவேண்டும். அதில் 25 பலம் சருக்கரையைக் கூட்டிப் பாகுசெய்து, அதில் அதிமதுரம், கூகைநீர், முந்திரிப்பழம் வகைக்குப் பலம் 2, பேரீச்சம்பழம், திப்பிலி வகைக்குப் பலம் 3, இவற்றை அரைத்து நெய் விட்டுக் கிண்டி மெழுகுபதத்தில் தேன் விட்டுப் பிசையவேண்டும். இந்த இலேகியத்தை வேளை ஒன்றுக்குப் புன்னைக்காய் அளவு உட்கொள்ள, வாந்தி, காமாலை, பாண்டுநோய், வறட்சி, திமிர்வாயு, சோகை, நீர்ச்சுருக்கு, குன்மம், உடம்புஎரிவுதீரும். இலேகியத்தின் செய்முறைகள் பலவுண்டு. இவைபற்றி விரிவாக வைத்தியநூல்களில் காணலாம்.

நெல்லிக்காய்த் தைலம்:

நெல்லிப்பழச்சாறு, பொன்னாங்காணிச்சாறு, கற்றாழைச்சாறு, சிறுகீரைச்சாறு முதலியவற்றைக் கூட்டித் ஆவின்பால், செவ்விளநீர், எள்ளெண்ணெய், அதிமதுரம், கோட்டம், ஏலம், குரோசானி, பச்சிலை, பூலா, கத்தூரிமஞ்சள், சாதிக்காய், சாதிப்பத்திரி, திரிகடுகு, திரிபலை, இலவங்கப் பத்திரி, பட்டை, பூஞ்சாந்து, சோம்பு, வால்மிளகு ஆகியவற்றின்மூலம் நெல்லிக்காய்த் தைலம் தயாரிக்கலாம். இத்தைலத்தின்மூலம், கண்மறைவு, மாலைக்கண், வெட்டை, கைகால் காந்தல், அழல்குற்றத்தால் உண்டாகும் நோய்கள் ஆகியவை தீரும்.

தொகுத்தளிப்பவர் :— " செந்தில்குமரன் "
ஆதாரம் :— பொருட்பண்புநூல் பயிர் வகுப்பு.
திரு. க. ச, முருகேச முதலியார், சென்னை.

கர்யம்செய்யும். வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில் அரசாங்க அனுகூலம் ஏற்படும் வாகன சுகம் திருப்தியளிக்கும். புத்திரர், பௌத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். எல்லாக்காரியங்களும், வெற்றிகரமாக நடக்கும். ஜூலை 22, 23, 24, தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பண வருமானம் எதிர்பார்க்கும் அளவுக்கு மேல் வரும். அதற்கேற்ப குடும்ப செலவினங்களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். வெள்ளைக் கல் பதித்த ஆபரணம் தரும். இயந்திரசாதனங்களில் சீர்திருத்தம் ஆகும். எல்லாக்காரியங்களும் கௌரவத்தில் நடந்துகொண்டிருக்கும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஜூலை 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

அனைத்துலக சைவசித்தாந்த

ஆராய்ச்சி நிறுவனம்

இதழ்வழிச் சைவசமயப் பயிற்சி

பாடம் – 6.

வைணவம்

சிவனது வழிபாடும் திருமால் வழிபாடும் தமிழ்நாட்டில் சங்க காலம் தொட்டுஇருந்துவருகின்றன. காடும், காடுசார் நிலத்திற்கும் கடவுளாகத் திருமால் விளங்கினர். '' மாயோன் மேய காடுறை உலகம் '' எனத் தொல்காப்பியம் பகருகிறது. சங்க நூல்களில் திருமாலைப்பற்றிப் பல குறிப்புகள் காணினும் எட்டுத்தொகை நூல்களைச் சேர்ந்த பரிபாடலில்தான் அதிகச் செய்திகள் உள. முதல் பரிபாடல் திருமாலைவர்ணித்து '' நின்வல வயின்நிறுத்தும் ஏவல் உழந்தமை கூறும் நாவல் அந்தணர் அருமறைப் பொருளே '' எனக்கூறுகிறது. எல்லா உலகும் திருமாலின் ஏவலுக்குப் பணிந்து நிற்கின்றமையை நாவன்மையுடைய அந்தணர் ஓதும் அரிய மறையாகிற பொருள் கூறும்.

சங்க காலத் திருமால் :

சங்க நூல்கள் திருமாலைப் பற்றிக் கூறும் செய்திகளாவன :-

1. உலகனைத்தையும் படைத்து அளித்து அழிக்கும் காரணன்
2. எங்கும் நிறைந்தவன்.
3. எல்லாமறிந்தவன்.
4. எல்லாம் வல்லவன்.
5. மறுபிறப்பு அறுத்து வீடுபேறு அளிப்பவன்.
6. குணங்களுக்குக் கொள்கலம், தாழ்வுகள் அற்றவன்.
7. எவராலும் அளவிட்டு அறியமுடியாதவன்.
8. தேவர்களனைவர்க்கும் ஆதி தேவன்.
9. உயிர்களுக்கெல்லாம் இயற்கை உறவினனுயிருக்கும் பரம் பொருள்.
10. மறைகளில் முழுமுதல்வனுக முழங்கப் படுபவன்.

இந்தத் திருமாலை வழிபடும் சமயம் வைணவம் எனப் பெயர் பெறும். பரிபாடலில்வந்தகருத்துக்களையும், தமிழகத்தில்வேரூன்றி வந்த நெறிகளையும் வைத்து ஆழ்வார்கள் தங்கள் பொருள் சுமந்த

பாசுரங்களைப் பாடினர். ஆழ்வார்கள் பாடல்களில் வைணவம் சாதி பேதமற்ற நெறியாகத் தோற்றமளிக்கிறது.

" தொண்டர் குலத்து உள்ளீர் வந்து அடிதொழுது
ஆயிரம் நாமம் சொல்லி,
பண்டைக் குலத்தைத் தவிர்த்து, பல்லாண்டு
பல்லாயிரத்தாண்டு என்மினே "

ஆழ்வார்கள் பாடல்களின் உட்கருத்து ஒவ்வொருவர் உள்ளத்திலும் அன்பு அடிப்படையில் ஒருமையுணர்வு பிறக்கவேண்டும் என்பதுதான். அவர்களிடை ஒருமையுணர்வு தோன்றின் பன்மை உணர்வினை வற்றச் செய்துவிடும் என ஆழ்வார்கள் நம்பினர். அந்த ஒருமையுணர்வு வந்தாலன்றித் திருமாலைக் கூடமுடியாது.

" யாவையும் எவரும் தானாய் அவரவர் சமயம் தோறும்
தோய்வு இலன்; புலன் ஐந்திற்கும் சொலப்படான்;
[உணர்வின் மூர்த்தி
ஆவிசேர் உயிரின் உள்ளால் ஆதுமோர் பற்றுஇலாத
பாவனை அதனைக்கூடில் அவனையும் கூடலாமே! "

— திருவாய் மொழி.

ஆழ்வார் பாசுரங்களினின்று காணப்பட்ட அரிய கருத்துக்களை நாதமுனி, ஆளவந்தார், இராமானுஜர் என்ற ஆசார்ய மணிகள் ஒழுங்குபடுத்தி ' விசிட்டாத்வைதம் ' என்ற சித்தாந்தத் தெளிவினை உருவாக்கித் தந்தனர்.

உபநிடதங்களிலும், பிரமசூத்திரங்களிலும் தெளிவு பெற முடியாத சிலசெய்திகளை, வேதாந்த தேசிகர் ஆழ்வார்களின் பாடல்களினால் தெளிவு பெற்றதாகக் கருதுகிறார்.

" பொய்கைமுனி பூதத்தார் பேயாழ்வார் தண்
பொரு நல்லரும் குருஆசன் விட்டு சித்தன்
துய்ய குலசேகரன் நம்பாண நாதன்
தொண்டரடிப் பொடி மழிசை வந்த சோதி
வையம் எலாம் மறை விளங்க வாள்வேல் ஏந்தும்
மங்கையர்கோன் என்று இவர்கள் மகிழ்ந்து பாடும்
செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதித்
தெளியாத மறை நலங்கள் தெளிகின்றோமே "

— தேசிகப் பிரிபந்தம் - 40.

தத்துவத்திரயம் :

வைணத்தில் தத்துவங்கள் மூன்று. இதனை வடமொழியில் தத்துவத்திரயம் என்பர். அஃதாவது சித்து, அசித்து, ஈஸ்வரன் என்பன.

சித்து உயிர்களின்தொகுதி. ஆன்மா அணுவின் அளவினைக் கொண்டது. அது அநந்தவடிவமாகவும், இந்திரியங்களுக்குப் புலப்படாத தன்மையுடையதாகவும், இறைவன் ஏவியபடி நடப்ப தாகவும், என்றும் இறைவனுக்கு அடிமையாகவும் உள்ளது. இந்த உயிர்த்தொகுதிகள் மூவகைப்படும். 1. பத்தர், 2. முக்தர், 3. நித்யர். இவர்களுள் (1) பத்தர் தளைப்பட்டிருப்பவர், துக்கம் அனுபவிப்பவர். பகவானின் மாயையால் மறைக்கப்பட்ட சொருபம் உடையவர். அஞ்ஞான வினைகளால் சூழப்பட்டவர். மாறி, மாறி தாவர, விலங்கு, மனித, தேவர் வடிவங்களில் தோன்றுவர். (2) முக்தர் தளைகளினின்று விடுபட்டவர். பகவத் அனுபங்களில் திளைத்தவர்கள். எப்போதும் பகவத் தொண்டுகளில் ஈடுபட்டவர். (3) நித்யர். சம்சாரசம்பந்த உணர்வு அற்றவர்கள். அநந்தர், சேனை முதலியார், பெரிய திருவடிபோன்று வைகுண்டத்தில் இடம் பெற்று இருப்பவர்.

அசித்து எனின் அறிவில்லாத பொருளைக் குறிக்கும். மக்கள், மாக்கள், விலங்கு முதலியவற்றின் உடம்பு முதலிய உலகப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் காரணமான பிரகிருதி. இது மூன்று தத்துவங்களைக் கொண்டது. (1) சுத்ததத்துவம்: இது ஞானத்தை யும், ஆனந்தத்தையும் உண்டாக்கவல்லது. (2) மிச்ரதத்துவம்: ஞான ஆனந்தத்திற்கு மறைவை உண்டாக்குவது. (3) கால தத்துவம்: இது ஈஸ்வரன் படைப்பின் பரிணமங்களுக்குக் காரண மாக அமைவது.

ஈஸ்வரன் கம்பநாடர் குறிப்பிடும் முத்தொழில் ஆற்றுபவன்.

"உலகம் யாவையும் தாம் உள ஆக்கலும்
நிலை பெறுத்தலும், நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையாரவர்
தலைவர் அன்னவர்க்கே சரண்ஆங்களே"

அர்த்த பஞ்சகம்:

இறைவன் மலரடியில்சேவைசெய்யும் உயிருக்கு ஐந்துபொருள் கள் உள. அவை, அடைபவன் - உயிர் அல்லது ஜீவன், அடையப் படுத்துவது - திருமால், பயன் - முடிவிலா இன்பம், உபாயம், பக்தி. இடையூறு - சாத்திர விரோதமான செயல்கள். இதனை,

"மிக்க இறை நிலையும், மெய்யாம் உயிர் நிலையும்
தக்க நெறியும் தடையாதித்,
தொக்கு இயலும் ஊழ்வினையும் வாழ்வினையும்"

என்று கூறுவர்.

இறைவனது நிலைகள் :

இறைவனதுதன்மையினை வைணவம்ஐந்து நிலைகளில்காணும்,

1. **பரத்துவம் :** வைகுண்டத்தில் பரப்பிரம்ம சொரூப மாக, முக்தர்கள் அனுபவிக்க நித்ய குறிகளுடன் உறையும் அண்ணல். '' சுரர் அறிவருநிலை '' என்பர் இதனை.

2. **வியூகம் :** உலகில்படைப்பு, அளிப்பு, அழிப்பு முதலிய இயற்றும் ஆத்ம சொரூபம். இந்த இறைவனைக் குணங்களோடு காண்பர். விண்ணவர் கூக்குரலுக்குச் செவிமடுக்கும் அண்ணிய நிலை இது. அவதாரங்களுக்கு இதனை நாற்றங்கால் என்பர்.

அ. **வாசுதேவன் :** பரத்துவ நிலையில்உள்ள இறைவன். ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜஸ் முதலிய ஆறு குணங்களோடு விளங்குபவன்.

ஆ. **சங்கர்ஷணன் :** ஞானமும், பலமும் உடையவன்.

இ. **பிரத்யும்னன் :** ஐசுவர்யமும், வீரியமும்உடையவன்.

ஈ. **அநிருத்தன் :** சக்தியும், தேஜசும் கொண்டவன்.

3. **விபவம் :** அவதார புருஷனைகத் தோன்றும் இறைக் கூறு. இதனை உபாய சொரூபம் என விளக்குவர். அவதாரத்தினை ஆவேச அவதாரம் என்றும் முக்கியஅவதாரம் என்றும் தொகுப்பர். கபிலர், தத்தாத்ரேயர், பரசுராமர் போன்ற அவதாரங்கள் முதல் பகுதியையும், மச்ச, கூர்மம் முதலிய 10 அவதாரங்கள் இரண்டாம் பகுதியினையும் சேரும். இறைவனின் எளிமை நிலையை இந்நிலை உணர்த்தும்.

4. **அந்தர் யாமித்துவம் :** இதனைப் பல சொரூபம் என அழைப்பர். உயிர்கள் உள்ளே புக்கிருந்து செயல்படும்இறைக்கூறு. '' திடவிசும்பு எரிவளி, நீர் நிலம் இவை மிசை, படர் பொருள் முழுவதுமாய் அவை தொறும், உடல்மிசை உயிர் எனச்சுரந்து எங்கும்பரந்துளன் '' '' சுடர்மிகு சுருதியுள்இவைஉண்ட அரனே'' என்று இந்நிலை நம்மாழ்வாரால் கூறப்பெறும்.

5. **அர்சாவதாரம் :** அன்பர்கள் தங்கள் விருப்பத்திற்கு இணங்க வழிபடும் இறைக்கூறு. இதனை விரோதி சொரூபம் என விளக்குவர். இதனை பின்னுனர் வணங்கும் சோதி என்பர். பயிர் தலையிலே குடில் கட்டிப் பயிர்களைப் பாதுகாப்பது போன்று, ஆன்ம கோடிகள் ஆகிய பயிர்களை, ஆங்காங்கே திருக்கோயில்களிலிருந்து பாதுகாக்கும் அருள்நிலையே இது.

இறைவனை அடையும் வழிகள் :

உயிர்கள் இறைவனை அடைய, வைணவம் இருவழிகளைச் சுட்டிக் காட்டியுள்ளது. அவை (1) பக்தி, (2) பிரபத்திஎன்ற இரு வழிகள்.

1. பக்தி :

கருமயோக வழிநின்று ஞானயோகம் பெற்று அதன்மூலமாக பக்தியோகம் அடைந்து இறைவனை யடையப் பக்குவநிலை பெற வேண்டும் என்கிறது வைணவம்.

யாதொரு பலனையும் எதிர்பாராது செய்யும் கருமத்தால் மனத் தூய்மை அடைகிறது உயிர். கருமத்தின் அடுத்த நிலையாக ஞான யோகம் வைக்கப்படுகிறது.

ஞானம் வந்துழி இறைவனை அடைய அவா ஏற்படும். அவா வந்தபோது தியானத்தில் அழுந்தித் தனக்கும் இறைக்கும் உள்ள தொடர்பினை உணருகிறது. இந்த ஞானமே பக்தி நிலையாக முதிர் கின்றது. பக்தி முதிர்ந்து முழுநிலையினை அடையுங்கால் உயிர் இறைவனை உணருகிறது. ஆழ்வார்களின் திருப்பாசுரங்களில் இந் நிலையின் விளக்கங்களை ஆங்காங்கே காணலாம்.

2. பிரபத்தி :

பத்திநிலையினை எல்லோரும் கடைப்பிடித்தல் சாத்தியமல்ல. ஆனால் சரணகதி அல்லது பிரபத்தி என்ற நெறி எளிதில் கைக் கொள்ளக்கூடியது. உயிர் உலகப்பற்றிலிருந்து விடுபெற இந்த வழிதான் எளிதானது. இது ஐந்து அங்கங்களை உடையது.

1. எம்பெருமானுக்கு அனுகூலனாக இருப்பதாக முடிவுசெய்தல்.
2. அவனுக்கு எதிரான நிலையைக் கைவிடுதல்.
3. அவன் காப்பான் என்பதில் திடநம்பிக்கை.
4. காக்கவேண்டும் என்ற வேண்டுகோளைஇடுதல்.
5. தன் செயலற்ற தன்மையைக் கூறி வேண்டுதல்.

“அகலகிலேன் என்று அலர்மேல்
மங்கை உறை மார்பா
நிகர்இல் புகழாய் உலக மூன்று
உடையாய் என்னை ஆள்வானே
நிகல்இல் அமரர் முனிக் கணங்கள்
விரும்பும் திருவேங்கடத் தானே
புகல் ஒன்றில்லா அடியேன் உன்
அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே”

— திருவாய்மொழி

ஐந்து உபாயங்கள் :

எல்லா வைணவர்களும் பஞ்ச சம்ஸ்காரங்கள் எனப்படும்ஐந்து உபாயங்களை மேற்கொள்ளவேண்டும். அவையாவன :

1. **தாபம் :** ஒரு ஆசாரியனுடன் தொடர்பு கொண்டு சங்கு, சக்கர முத்திரைகளைக் கைகளில் பொறித்துக் கொள்ளுதல்.

2. **புண்டரம் :** நெற்றியிலும், மற்றைய அவயங்களிலும், திருமண் (நாமம்) இட்டுக் கொள்ள அறிதல்.

3. **நாமம் :** ஆச்சார்ய புருடனிடமிருந்து ஒரு தாச நாமத்தைப் பெற்றுக் கொள்ளுதல்.

4. **மந்திரம்:** ஆச்சார்ய புருடனிடமிருந்து மூன்று மந்திரங்களை உபதேசமாகப் பெறுதல். அம்மந்திரங்கள் மூன்ருவன.

(அ) திருமந்திரமான எட்டெழுத்து மந்திரம்.

(ஆ) துவயம் திருமந்திரத்தின் மூன்றுபாகங்களின் இரண்டின் விளக்கம்.

(இ) சரம சுலோகம் துவயத்தின் பொருளை விரிவாக்குவது.

5. **அர்ச்சனம் :** சாலிக்கிராமம் முதலிய விஷ்ணுவின் சின்னமாக விளங்கும் பொருளை ஆச்சார்யனிடமிருந்து பெற்று வழிபடுதல்.

வைணவத்தின் வகைகள் :

வைணவத்தில் இரண்டு பிரிவுகள் உண்டு. அவை வடகலை, தென்கலை என்பன. வடகலையினர் வடமொழியிலுள்ள வேத, சாத்திரங்கள், தோத்திரங்களுக்குச் சிறப்பு இடம் அளிப்பவர்கள். ஆயினும் ஆழ்வார்களின் திவ்விய பிரபந்தத்தினையும் ஓதுவார்கள். தென்கலையினர், தமிழிலுள்ள ஆழ்வார்களின் பாடல்களுக்கு ஏற்றம் அளிப்பவர்கள். திருமால் உற்சவ காலங்களில் உலா வரும்போது, ஆழ்வார்களின் பாசுரங்கள் ஓதுபவர்கள் முன்செல்ல, திருமால் பின் வருவார். அதற்குப் பிறகுதான் வடமொழி வேதசாத்திரங்கள் ஓதுவர். இதைச் சுட்டிக்காட்ட ஒரு மரபு வழிச் செய்தி உண்டு. ''தமிழை நாடித் திருமால் செல்வதாகவும், அவரைப்பிடிக்க வடமொழிசெல்வதாகவும், பாமரர் கூற்று.

“ கணிகண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டா — துணிவுடைய
செந்நாப் புலவன் யான்செல்கிறேன் நீயும் உன்றன்
பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள். ”

என்ற பாடலின் அடியாக அமைந்த வரலாறே அது. பழமறைகள் முறையிடப் “பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலே” என்று குமரகுருபரர் காணும் நிலையே அது. தொடர்ந்து, “ஆரண முழங்கப் பஞ்சவர்க்குத் தூதுநடந்தான்” என்று சிலம்பும் கூறும்.

வடகலைக்கும், தென்கலைக்கும் 18 பேதங்கள் உள. அதில் சிறப்பானதுதான் ஆச்சார்யனைத் தேடிச்சென்று ஏற்கனவே குறிப்பிட்ட ஐந்து சம்ஸ்காரங்களைப் பெறுவது. வடகலையினர் ஆச்சார்யனைத் தேடிச்சென்று பெறுவர். தென்கலையினர் அப்படிச் செய்யார். பகவான் நாமத்தினை ஓதிவந்தால் போதுமானது என்ற கருத்துக் கொண்டவர்கள். இந்த சித்தாந்தத்தைக் குரங்கு(மார்க்கட)நியாயமென்றும் பூனை (மார்ஜால) நியாயமென்றும் கூறுவர். இடம்விட்டு இடம் செல்லும் போது குரங்கின் குட்டி தன் தாயைப்பற்றிக் கொண்டே செல்லும். அதுபோல வடகலையார் ஆச்சார்யபுருஷனை ‘சிக்கெனப் பிடித்துக் கொள்கின்றனர்’. பூனை தனது குட்டியை கவ்விச் செல்வது போல, தென் கலையார் சதகாலமும் திருமால் சிந்தனையாக இருந்து எம்பெருமான் கடைத்தேற்றுவார் என்ற சிந்தனையில் இருப்பர்.

மூன்று மந்திரங்கள் :

வீடுபேற்றை அடைய மூன்று மந்திரங்களைத்தெளிந்துகொள்ளுதல் வேண்டும். அவைதாம் (1) திருமந்திரம். (2) துவயம். (3) சரம சுலோகம்.

1. திருமந்திரம் :

ஓம் + நம + நாராயணாய என்பது தான் திருமந்திரம். இந்த மந்திரத்தில் மூன்று பாகங்கள் உள. ஓம் + நம + நாராயணாய என்பது. ‘ஓம்’ என்ற பகுதியினையே ‘நம’ + ‘நாராயணாய’ என்ற இரண்டு பகுதிகள் விரிவுபடுத்துகின்றன.

2. துவயம் :

இந்த மந்திரம் ‘நம’ + ‘நாராயணாய’ என்ற இருபதங்களை விரிக்கின்றது.

3. சரம சுலோகம் :

துவயத்தின் பொருளையே விரிவாக விளக்குகின்றது.

இம்மூன்றும் மந்திரப் பகுதிகளும் வேதத்தின் சாரத்தை உரைப்பதால், இப் பொருளை உணராதார் காதில் விழுந்தால் பயனில்லாது போகும் என்பதால் இவை ' மறை மொழிகள் ' எனப்படும்.

ஓம் நம நாராயணய என்ற எட்டெழுத்து மந்திரம் ' பெரிய திருமந்திரம் ' எனப்படும்.

நாராயணன் என்ற பதத்தினை 'நாரம்' + 'அயனம்' எனச் சொல்லுவர். 'நாரம்' எனின் அழிவில்லாத பொருளின் கூட்டம் என்பர். அயனம் என்பது இடம் எனப் பொருள் படும். ஆகவே 'நாராயணன்' வியாபகத்துவத்தினைக் குறிக்கும். அஃது அழிவில்லாத பொருள்களின் கூட்டத்திற்கு இடமாக இருப்பவன் என்றாகும். அந்தர் யாமித்துவ அடிப்படையில் இந்தப் பெயர், அழிவில்லாத பொருள்களை இடமாகக் கொண்டவன் என்றும் ஆகும்.

" குலம் தரும் செல்வம் தந்திடும்; அடியார்
 படுதுயர் ஆயின எல்லாம்
நிலம் தரம் செய்யும்; நீள் விசும்பு அருளும்;
 அருளொடு பெருநிலம் அளிக்கும்;
வலம் தரும்; மற்றும் தந்திடும்; பெற்ற
 தாயினும் ஆயின செய்யும்;
நலம்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
 நாராயணா என்னும் நாமம் "

— பெரிய திருமொழி.

வினாக்கள்

1. வைணவத்தின் மூன்று தத்துவங்களை விளக்குக?
2. இறைவனை அடையும் வழிகள் யாவை?
3. மார்கட, மார்ஜால நியாயங்கள் - விளக்குக?
4. வைணவத்திலுள்ள ஐந்து உபாயங்கள் யாவை?
5. குறிப்பு எழுதுக :-

 அர்த்த பஞ்சகம், அந்தர்யாமித்துவம்,
 மூன்று மந்திரங்கள்.

கட்டுரை வழங்கியவர் :- டாக்டர். ஏ. வி. ஜயசந்திரன்.